www.tamilarangam.net

தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

# ஏது செய்தோம் நாம்?



ராஜீவ்காந்தி கொலைவழக்கு:

## அதிகாரம்
## அரசியல்
## மரணதண்டனை

www.tamilarangam.net

# என் செய்வோம்?

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் நடந்து முடிந்த குரூரமான நீதித்துறைத்தீர்ப்பு பற்றிய சிறு பரிசீலனை இது. 21.5.91ல் தமிழகத்தில் சிறீபெரும்புதூரில் மனித வெடிகுண்டால் கொல்லப்பட்ட ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக கைது செய்யப்பட்ட 26 தமிழர்களுக்கும் தூக்குத்தண்டனை வழங்கியிருப்பது உலகெங்கிலுமுள்ள மனிதாபிமானிகளின் இதயங்களை உலுப்பியுள்ளது. உலகின் எந்தநாட்டு நீதித்துறையிலும் இது போன்ற கொடூரமான தீர்ப்பு இதுவரை வழங்கப்பட்டதில்லை என்று சட்ட அறிஞர்கள் கருதுகின்றனர்.

கண்மூடித்தனமான கைதுகள், சித்திரவதை வாக்குமூலங்கள், கைது செய்யப்பட்டவர்களைத் தனிமைச்சிறையில் வெளித்தொடர்புகள் எதுவுமற்ற நிலையில் வைத்தமை, இரகசிய விசாரணை, இரகசிய சாட்சிகள், சர்வதேச நீதிநெறிமுறைகளுக்கு எதிரான தடா சட்டத்தின் கீழான விசாரணைகள், பிடிபட்டவர்களை வைத்துக்கொண்டு புலனாய்வுத்துறை சோடித்த கதை, விசாரணைக்கு முன்பேயே குற்றவாளிகள் இவர்கள் தானென்று முடிவு கட்டிக்கொண்டுவிட்ட நீதித்துறை, அரசியல் அழுத்தங்களுக்குத் தன் சுதந்திரத்தைப் பறிகொடுத்த நீதி, பத்திரிகைகளும் பிற செய்தி ஊடகங்களும் புனைந்து வழங்கிய பிரச்சார மாயை, பொலிஸ் மற்றும் புலனாய்வுத்துறையின் பயங்கர அச்சுறுத்தல், குற்றங்களுக்கான தண்டனை என்பதைவிட எதிர்காலத்திற்கான அச்சுறுத்தலாக, எச்சரிக்கையாக வழங்கப்பட்ட தீர்ப்பு என்று சகல நீதி நியாயங்களையும் புறந்தள்ளி வழங்கப்பட்ட இத் தூக்குத்தண்டனைத் தீர்ப்பு இராணுவ சர்வாதிகார அரசுகள் கூட வழங்கத் தயங்கும் தீர்ப்பாகும். இராணுவம், ஆதிக்க அரசியல், சர்வாதிகார அரசுகள், தீவிர வெறித்தனமான அமைப்புகள்கூட கையாளத் தயங்கும் நீதித்துறை பயங்கரவாதம் இதுவாகும். சுதந்திரமான நீதித்துறை வரலாற்றில் இது கடுமையான களங்கமாகும்.

எந்த மனச்சாட்சிக்கும், நியாயத்திற்கும் இடமின்றி கைது செய்யப்பட்ட 26 பேருக்கும் தூக்குத்தண்டனை வழங்கியிருப்பது நீதிநெறிமுறை அனைத்திற்கும் விரோதமானது. தூக்குத்தண்டனைக்கு எதிரான கருத்துகள் சர்வதேசரீதியில் அங்கீகாரம் பெற்றுவரும் நவீன சூழலில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட பலரின் மீதான குற்றச்சாட்டுகளைப் பார்க்கும் போது யாரும் அதிர்ச்சியடையவே செய்வர். சம்பந்தப்பட்ட வழக்கில் முக்கிய நபர் என்று கருதப்பட்டவரின் நண்பர்களாயிருந்தவர்கள், அவரோடு பயணம் செய்தவர்கள் அனைவரின் மீதும் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டிருப்பது, ஒரு உயிரின் விலையை நீதித்துறை எவ்வளவு அற்பமாக கருதியிருக்கிறது என்பதையே காட்டுகிறது. இந்தியா போன்ற மாபெரும் ஜனநாயக நாடொன்றில் மிக அற்பமான தொடர்புகளுக்கும் தூக்குத்தண்டனை வழங்கியிருப்பது நீதித்துறையின் அநீதியான நடத்தையை மட்டுமே வெளிப்படுத்துகிறது.

தூக்குத்தண்டனை மிகக்கொடூரமான தண்டனை என்று கருதும் 44 நாடுகள் தூக்குத்தண்டனையை முற்றாகவே தமது நாடுகளில் நீக்கியுள்ளன. மேலும் 17 நாடுகளில் தூக்குத்தண்டனை நிலவினாலும் அவை யுத்தக் குற்றவாளிகளுக்கு மட்டுமே உரியனவாக உள்ளன. மேலும் 25 நாடுகளில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டாலும் அத்தண்டனையை அமுல்படுத்தும் நிலைமை காணப்படவில்லை. அமெரிக்க உயர்நீதிமன்றம் தூக்குத்தண்டனையை "கொடூரமானதும் அசாதாரணமானதுமான தண்டனைமுறை" என்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ராஜீவ் கொலை வழக்கில் விதிக்கப்பட்டுள்ள தூக்குத்தண்டனைத் தீர்ப்பு மனித உரிமைகளின் பேரிலும், மனிதாபிமானத்தின் பேரிலும், நீதியின் பேரிலும், உண்மையின் பேரிலும் கண்டிக்கப்பட வேண்டியதொன்றாகும். அதிகாரவர்க்கத்தால் திணிக்கப்பட்டிருக்கும் இந்தத் தீர்ப்பு அங்கீகாரம் பெற்றுவிடுமானல் இந்திய மண்ணில் நீதிக்கும் நியாயத்திற்கும் இனி இடமேயில்லை என்பது உறுதியாகிவிடும்.

இதயமற்றோரின் வாசல்தலமாக நீதிமன்றம் உருவாகிப்போய்விடும். எதிர் காலத்தில் மனித உரிமைகளின் அபாயச்சங்கொலியாக இது அமைந்துவிடும். இந்த அநியாயத்தீர்ப்பிற்கு எதிராக உலகசமூகம் தனது கண்டனங்களை வெளிப்படுத்த வேண்டும்; அபிப்பிராயங்களை ஒன்று திரட்டவேண்டும்.

○ ○ ○

இப்பிரசுரம் ராஜீவ் காந்தி கொலை வழக்குத் தண்டனை தொடர்பான பின்னணிகளையும், விபரங்களையும், விமர்சனங்களையும் மக்கள் முன் வைக்கிறது. பூந்தமல்லி சிறப்பு தடா நீதிமன்றத்தின் தீர்பபை எதிர்த்து மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு நியாயம் கோரி மனுதாக்கல் செய்திருக்கிறது.

தூக்குத்தண்டனையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வைக்கப்பட இருக்கும் மேன்முறையீட்டு வாதங்கள் பற்றி **வழக்கறிஞர் துரைச்சாமி** பின்வருமாறு கூறினார்.

1. சதித்திட்டம் உருவானது பற்றி ஒரு சாட்சி கூட விசாரிக்கப்படவில்லை.

2. சதிக்கு சாட்சியம் இல்லாத பட்சத்தில் பிறர் சாட்சியின் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு தீர்ப்பு எழுதப்பட்டது தவறாகும்.

3. சதித்திட்டத்தில் குற்றம் சாட்டப்பட்ட 26 பேருக்கும் தனிப்பட்ட முறையில் இச்சதிபற்றி தெரியும் என்பதற்கான சாட்சியம் எதுவும் கிடையாது.

4. இச்சதித்திட்டத்தில் ஈடுபட்டு குற்றச்செயல் செய்ததாகக் கூறப்படும் **சிவராசன், சுபா, தனு** ஆகியோர் இறந்துவிட்டனர்.

5. இந்த வழக்கில் குற்றவாளியான **இரும்பொறை** இராமேஸ்வரத்திலிருந்து **குண்டு சாந்தன்** கொடுத்த கடிதத்துடன் இலங்கைக்கு போக முற்பட்டு கைது செய்யப்பட்டார். இந்த அடிப்படையில் தமிழக அரசின் க்யூ பிராஞ்ச் (BRANCH) தொடுத்த வழக்கில் விடுதலை செய்யப்பட்டதையும் அதே குற்றச்சாட்டிற்காக பத்மநாபா கொலை வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டதையும், நீதிமன்றம் கவனத்திற்கெடுக்காது அதே குற்றச்சாட்டிற்காக இவ்வழக்கில் தூக்குத்தண்டனை வழங்கியிருப்பது தவறானதாகும்.

6. இதே போன்று ஏராளமான முரண்பாடுகளும், தவறுகளும் எம்மால் சுட்டிக்காட்டப்பட்டன. ஆனால் நீதிமன்றம் எதனையும் கவனத்திற்கு எடுக்கவில்லை.

இவ்வாறு பலவழிகளில் உலகத்தின் கண்களுக்கு மூடிமறைக்கப்பட்ட உண்மைகளை சர்வதேசரீதியில் வெளிக்கொண்டு வரவேண்டியது எமது கடமையாகும். அது மட்டுமன்றி பொருளாதார ரீதியில் பலமற்ற இந்த 26 பேரினது மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குச் செலவுகளுக்காக எமது பங்களிப்பினை மனமுவந்து அளிக்க வேண்டியதும் எங்களது தார்மீகக் கடமையாகும்.

இனி என்ன செய்யப்போகிறோம்?
ஒன்றுபடுவோம்; ஒரு குரல் கொடுப்போம்.

**வெளியீட்டாளர்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குரல் 1

# ராஜீவ் காந்தி கொலை வழக்கு: என்ன நடந்தது?

91.05.21 அன்று தேர்தல் பிரச்சாரம் ஒன்றிற்காக முன்னாள் இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தி தமிழ் நாட்டிலுள்ள சிறீபெரும்புதூரிற்கு வந்திருந்தார். அன்றே மனித வெடிகுண்டொன்றினால் ராஜீவ்காந்தி கொல்லப்பட்டார். அக்கொலை காரணமாக பின்னர் பல்வேறு நாட்களில், பல்வேறு சந்தர்ப்பங்களில் 26 தமிழர்கள் (இந்தியத் தமிழர் 13, இலங்கைத்தமிழர் 13) கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். ராஜீவ் காந்தியின் கொலைச் சதியில் இவர்கள் ஈடுபட்டவர்கள் என மேற்குறிப்பிட்ட 26 பேர் மீதும் சிபிஐ யினால் வழக்குத் தொடுக்கப்பட்டிருந்தது.

ஆறரை ஆண்டுகள் கழித்து பூந்தமல்லி தடா சிறப்பு நீதிமன்ற நீதிபதி நவநீதம் அவர்கள் 98.01.28 அன்று இவ்வழக்குத் தொடர்பாக தீர்ப்பொன்றினை அளித்திருந்தார். நீதிபதி நவநீதம் வழங்கிய தீர்ப்பு இதுதான்: குற்றம் சாட்டப்பட்ட 26 பேருக்கும் தூக்கில் தொங்கவிடுவதன் மூலம் மரணதண்டனை நிறைவேற்றப்படவேண்டும் என்பதாகும். 26 பேரில் ஒருவர் கூட இத்தீர்ப்பிலிருந்து தப்ப முடியாமல் போய்விட்டது.



வழக்கொன்றில் குற்றம் சாட்டப்பட்ட 26 பேருக்கும் நீதிமன்றத்தினால் தூக்குத் தண்டனை எனத் தீர்ப்பளிக்கப்படுவது இந்திய நீதிமன்ற குற்றவியல் வரலாற்றில் மட்டுமல்ல, உலக நீதிமன்ற குற்றவியல் வரலாற்றிலும் இதுவே முதற் தடவையாகும். இராணுவ நீதிமன்றங்களிலும் கூட குற்றவாளிகள் எனக் கருதப்படுவோர் செய்த குற்றத்தின் தன்மையின் அடிப்படையில் தான் மாறுபட்ட தண்டனைக்கு உட்படுவர். இப் பொதுவான நீதிமன்ற மரபை மீறி வெறும் சந்தேகத்தின் அடிப்படையில், இவர்கள் இக்குற்றத்தை செய்திருக்கலாம் எனும் ஊகத்தின் அடிப்படையில் குற்றச்சாட்டப்பட்ட 26 பேருக்கும் தூக்குத்தண்டனை எனும் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இவ் அநியாயத் தீர்ப்புத் தொடர்பாக பின்வரும் விடயங்களை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

1. ஒரு விடயத்தை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். பொதுவில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீது சுமத்தப்படுகின்ற குற்றச்சாட்டுக்களில் சிறு சந்தேகம் ஏற்பட்டாலும், அந்தச் சந்தேகத்தின் பலனை (Benefits of Doubts) குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு சாதமாக வழங்குவதுதான் நீதிமன்றின் பொதுவான நியதி. இத்தீர்ப்பில் அந்த நோக்கம் பாதகமான முறையில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதுதான் விசித்திரம். நீதிமன்றம் சந்தேகத்தின் பலனை குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு வழங்காமல், பொலிஸ் தரப்பிற்கு வழங்கியுள்ளது.

2. இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட 26 பேரும் ராஜீவ் காந்தி கொலையில் பங்கேற்றிருக்க வேண்டும்; இந்த 26 பேருக்கும் தெரியாமல் இக்கொலை நடந்திருக்க முடியாது என்கின்ற இந்த சந்தேகம் கடுமையான தீர்ப்பு வழங்க காரணமாக அமைந்திருக்கின்றது. தூக்குத்தண்டனை என்பது தான் மிக அதிகபட்சமான தீர்ப்பு. அத்தகைய தீர்ப்புதான் 26 பேருக்கும் வழங்கப்பட்டிருக்கிறது.

3. வேறொரு விடயம் இங்கு கவனத்தைக் கோருகிறது. பொலிஸ் தரப்பு குற்றச்சாட்டுக்களின்படி இந்த 26 பேரில் எவரும் நேரடியாக ராஜீவ்காந்தி கொலையில் சம்பந்தப்பட்டவர்களில்லை. ஆனால் நீதிமன்றம் இவை ஒன்றையும் கருத்தில் எடுக்கவில்லை. ஒரு எழுமானத்தின் அடிப்படையில் நீதிமன்றம் தனது தீர்ப்பினை வழங்கியுள்ளது.

4. முதலில், இந்த வழக்குத் தொடர்பான விசாரணையை மேற்கொண்ட இந்திய மத்திய புலனாய்வுத்துறையான சிபிஐ(CBI) மொத்தமாக 41 பேர் மீது குற்றஞ்சாட்டியிருந்தது. இவர்களில் மூவர் தலைமறைவாகி விட்டனர். 12 பேர் பல்வேறு காலகட்டங்களில் இறந்துவிட்டனர். இந்நிலையில் மீதமிருந்த 5 பெண்கள் உட்பட கைது செய்யப்பட்ட 26 பேர் மீதும் வழக்குப்பதிவு செய்யப்பட்டு சிபிஐ யினால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தடாச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இவர்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்தோர் 13 பேரும் இலங்கையைச் சேர்ந்தோர் 13 பேரும் ஆவர்.

5. 1991 நடுப்பகுதியில் சிபிஐ யினால் தொடங்கப்பட்ட விசாரணை பல்வேறு காரணங்களால் இழுத்தடிக்கப்பட்டது. இதனிடையில் பூந்தமல்லி கிளைச் சிறையில் அடைபட்டிருந்த 26 பேரும் பாதுகாப்புக் காரணங்கள் என்று சொல்லப்பட்டு 1991, ஒக்ரோபர் மாதம் செங்கல்பட்டு சிறைக்கு மாற்றப்பட்டனர். அதன் பின்னர் 1992, ஒக்ரோபரில் சேலம் சிறைக்கும், 1993 ஜனவரியில் பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றிற்கும் கொண்டு வரப்பட்டனர்.

6. இன்னொன்றையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். இந்தியச் சட்டத்தின்படி தடாச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்கள் மீது ஒருவருடம் முடிவதற்கிடையில் முழுமையாக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இங்கு நடந்தது முற்றிலும் மாறுபட்டது. இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட 26 பேர் மீதான குற்றப்பத்திரிகை 92.05.20 இல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும் கூட, முழுமையாகத் தாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை. குற்றப்பத்திரிகை பகுதி பகுதியாக தவணை முறையில்தான் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படுகின்ற போதே, குற்றப்பத்திரிகை தொடர்பான ஆவணங்களும் ஆதாரங்களும் தாக்கல் செய்யப்பட வேண்டும். இது முக்கியமான விதியாகும். இந்த விதியும் இங்கு மீறப்பட்டிருக்கின்றது. இந்த வழக்கில் விசாரணை-களை மேற்கொண்ட சிபிஐ யினால் எந்த முறையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. அது மட்டுமன்றி நீதிமன்றில் அவ்வப் போதும், தேவைப்பட்ட போதுமே ஆதாரங்கள் வழங்கப்பட்டன. குற்றப்பத்திரிகையின் நகலையும் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்குக் கொடுப்பதில் கூட சிபிஐ இழுத்தடிப்பையே மேற்கொண்டது.




7. மேலும் முக்கியமானதொன்றினையும் குறிப்பிட வேண்டும். நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பதாக குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சிபிஐ யினால் மிகக்கொடுரமான முறையில் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டனர். இறுதியில் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டே ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. இதில் இன்னொன்றையும் வெளிப்படுத்த வேண்டும் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் அளித்ததாகக் கூறப்படும் ஒப்புதல் வாக்குமூலங்களின் பல பக்கங்களில் வாக்குமூலம் அளித்தவர்களின் கையெழுத்து இடப்படவில்லை. வாக்குமூலம் அளித்தவரின் கையெழுத்து ஒப்புதல் வாக்குமூலத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் இல்லாதிருந்தால் அந்த ஒப்புதல் வாக்குமூலம் செல்லுபடியாகாது. இது யாவரி ற்கும் தெரிந்த விடயம். நீதிபதிக்குத் தெரியாமல் விட நியாயமில்லை.

ஆனால் இங்கு நடந்தது என்ன? நீதிபதி நவநீதன் கையெழுத்தில்லாத ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில் தூக்குத்தண்டனை எனும் தீர்ப்பு வழங்கியிருப்பதானது, நீதிமன்றத்தை, சட்டவன்மையை அவமதிக்கின்ற செயலாகும். தான்தோன்றித்தனமான அவரது இந்த நடவடிக்கையானது பல சந்தேகங்களை ஏற்படுத்துகின்றது. அரசியல் நிர்ப்பந்தம் அவரை பொம்மை நீதிபதியாக்கியிருக்கலாம் எனும் ஊகத்திற்கே வழி சமைக்கின்றது.

8. சாதாரணமான விதி ஒன்றினைக் கவனிக்க வேண்டும். ஒரு குற்றவியல் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்கள் வழக்கின் போது குற்றவாளிகளாக ஐயந்திரிபற நிரூபிக்கப்பட வேண்டும். நிரூபிக்கப்படமுடியாத விடத்து அவர்கள் குற்றவாளிகள் அல்லர். ஆனால் தடா சட்டத்தினைப் பொறுத்து இச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படுபவர்கள் தாம் குற்றவாளி கள்ல்லர் என்பதை நிரூபிக்க வேண்டும். இரண்டு அம்சங்களையும் சரியாக விளங்கிக்கொள்ள வேண்டும். சாதாரண குற்றவியல் சட்டத்தில் ஒருவரைக் குற்றவாளி என வழக்கு தொடுக்கும் அரசு அவரைக் குற்றவாளி என நிரூபிக்க வேண்டும். ஆனால் தடாச்சட்டத்தின் கீழ் குற்றவாளிகள் என வழக்குத்தொடரப்பட்டவர்களே தாம் குற்றவாளிகள் அல்லர் என நிரூபிக்க வேண்டும். அப்படி நிரூபிக்கப்படாத விடத்து அவர்கள் குற்றவா ளிகள் என நீதிமன்றம் கருதும். தடாச்சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட்ட இந்த 26 பேரும், தாம் குற்றவாளிகள் அல்லர் என நிரூபிக்கும் சந்தர்ப்பம் இருந்தும், நீதிபதி அதற்கான அவகாசத்தை வழங்கவில்லை. நீதியும் சட்டமும் செய்துவிட்ட வஞ்சகச் செயல் இது.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

9. மேலுமொன்று, எப்போதும் குறிப்பிட்ட வழக்கிற்குரிய நீதிமன்றத்தினை முடிவு செய்த பின்னரே அந்த வழக்குற்குரிய வேலைகள் ஆரம்பமாகும்.ஆனால் இங்கு அப்படியல்ல. இந்த வழக்கைப் பொறுத்து சிபிஜ யினால் வழக்கு தாக்கல் செய்துவிட்ட பின்பு தான் வழக்கு நடத்தப்படும் நீதிமன்றம் எதுவெனத் தீர்மானிக்கப்பட்டது. இதனூடாகச் சொல்லப்பட்ட செய்தி என்னவென்றால், இந்த வழக்கு என்பது கண்துடைப்பு நாடகம். தீர்ப்பு இது தான் என்பது எப்போதோ முடிவாகிவிட்டது. தீர்ப்பும் எதெச்சதிகாரத் தீர்ப்பாகும்.

10. இந்த எதெச்சதிகாரத் தீர்ப்பை வழங்குவதற்கு சிபிஜயினால் தயாரிக்கப்பட்ட குற்றப்பத்திரிகை கூட விநோதமாக இருந்தது. வழமையாகக் கிடைக்கின்ற ஆதாரங்கள், ஆவணங்கள், சாட்சிகளின் அடிப்படையில் குற்றப்பத்திரிகை தயாரிக்கப்படுதல், குற்றவாளிகள் யாரெனத் தீர்மானிக்கப்படுதல் இவையே ஒழுங்கு முறையான நீதிமன்றத் தீர்ப்புக்கு இட்டுச் செல்வதாகும். ஆனால் இந்த வழக்கினைப் பொறுத்து, ஒருஅனுமானத்தின் அடிப்படையில் 'இவர்கள் தான் குற்றவாளிகள்' எனத் தீர்மானித்ததன் பிறகே வழக்கு விசாரணைக்கு வேண்டிய ஒப்புதல் வாக்குமூலங்கள், ஆதாரங்கள், ஆவணங்கள் சாட்சிகள் தயாரிக்கப்பட்டன.

இதன் அடிப்படையில் சிபிஜ யினால் 1014 சாட்சிகள் இருப்பதாக முதலில் கூறப்பட்டது. ஆனால் 288 பேர் தான் சாட்சிகளாகக் கூப்பிட்டு விசாரிக்கப்பட்டனர். அத்துடன் சாட்சிகளின் விசாரணையில் கூட விசித்திரம் நடந்தது. சாட்சிகளின் பெயர் முன்கூட்டியே குற்றவாணளிகள் தரப்பில் ஆஜராகும் வழக்கறிஞர்க்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆனால் அப்படி நடக்கவில்லை. சாட்சியாக அழைக்கப்படுபவர்களின் எண்கள் மட்டுமே கொடுக்கப்பட்டது. இதனால் சாட்சி சொல்ல வருபவர் யார்? அவர் எதற்காகச் சாட்சி சொல்ல வருகின்றார்? சாட்சியின் நம்பகத்தன்மை எவ்வளவு? என்பதெல்லாம் குற்றவாளிகள் சார்பில் ஆஜராகும் வழக்கறிஞர்களுக்குத் தெரியவில்லை. சிபிஜ இந்த வழக்கை ஒரு பொருட்டாக மதிக்காமல், ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட தீர்ப்பை வழங்குவதில் வலு கவனமாக இருந்தது என்பது இதிலிருந்து தெளிவாகின்றது.



11. அடுத்ததாக ஒன்றையும் குறிப்பிட வேண்டும். இந்த வழக்கில் வி.ஐ.பி (VIP) சாட்சிகளாக வை.கோபால்சாமி, ரமேஸ் பண்டாரி, லதா பிரியகுமார், மரகதம் சந்திரசேகர், காசி ஆனந்தன், ஆவடி மனோகரன், மலைச்சாமி, இலங்கை டி.ஐ.ஜி (DIG) குணத்திலக்க ஆகியோர் விசாரிக்கப்பட்டனர். ஆனால் சிலர் வேண்டுமென்றே தவிர்க்கப்பட்டனர். உதாரணமாக ராஜீவ் காந்தியின் தமிழ்நாட்டுச் சுற்றுப்பயண நிகழ்ச்சியைத் திட்டமிட்ட காங்கிரஸ் தலைவர் மற்றும் காங்கிரஸ் கட்சியின் முக்கிய புள்ளியாகக் கருதப்பட்ட ஜி.கே.மூப்பனார், போன்றோர் சாட்சியாக அழைக்கப்படவில்லை. குறிப்பாக இன்னுமொன்று ராஜீவ் காந்தியைக் கொல்ல சர்வதேசச்சதி நடந்தது. அதில் திரை மறைவு அரசியல் நடாத்தும் சந்திரசாமிக்கும் பங்குண்டு. சந்திரசாமியுடன் சுப்பிரமணிய சுவாமிக்குத் தொடர்பு உண்டு. இவை பற்றியெல்லாம் ஜெயின் கமிசனின் விசாரணையில் சாட்சிகள் சொல்லியிருக்கிறார்கள். இவர்களெல்லாம் சாட்சிகளாக அழைக்கப்பட வேண்டும் என நீதிபதி கவனத்தில் கொள்ளவில்லை. இவையெல்லாம் எவற்றை வெளிக்காட்டுகின்றன என்பது தெளிவு.

12. இன்னொரு கேள்வியும் எழுகின்றது. மூடிய கதவினுள் இவ்வழக்கு விசாரணை ஏன் நடத்தப்பட வேண்டும்? எந்தப் பத்திரிகையாளரும் இந்த வழக்கு விசாரணையைப் பார்வையிட அனுமதிக்கப்படவில்லை. இதன் காரணம் சந்தேகமூட்டுகின்றது. உண்மைகள் பலவற்றை மூடிமறைப்பதற்காக, பொய்மைகள் பல வெளி உலகிற்குத் தெரியாதிருப்பதற்காக, மூடிய கதவினுள் விசாரணை நடைபெற்றிருக்க வேண்டும். மூடிய திரையினுள் வஞ்சகமான நாடகம் அரங்கேறியது.

இப்படி எத்தனை, எத்தனையோ கேள்விகள் எழுகின்றன. எத்தனை எத்தனையோ விடயங்கள் தெரிகின்றன. எல்லாவற்றையும் மீறி இழக்கப்போவது 26 உயிர்கள் என்னும் துயரில் தோய்ந்து எழுதப்பட்ட சேதி எல்லோர் மனதையும் உலுக்குகின்றது. உலகின் மனச்சாட்சி மீது ஓங்கி அறைகின்றது. நடப்பது நமக்கல்ல என்று விட்டு நாம் சும்மா இருந்து விடப் போகிறோமா? ❑



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குரல் 2

# இவர்கள் யார்? என்ன செய்தார்கள்?



1

## நளினி


***குற்றஞ்சாட்டப்பட்ட 1 வது எதிரி***

***இந்தியத் தமிழர்.***

தனியார் நிறுவனமொன்றில் வேலை செய்துகொண்டிருந்த எம்.ஏ பட்டதாரியான நளினி 21வது எதிரி பத்மாவின் மகள் . இவருக்கு 91ம் ஆண்டு ஜனவரி மாதம் இந்தியாவிற்கு வந்த இரண்டாவது எதிரி முருகனுடன் நட்பு ஏற்பட்டது.இந்த நட்பு சிலகாத்தில் காதலாக மாறியது. இந்தக் காதலின் அடிப்படையில் ராஜீவ் காந்தி கொலைசெய்யப்பட்டு பத்து நாட்களிற்குப் பிறகு இருவரும் திருப்பதிக்குச் சென்று திருமணம் செய்து கொள்கின்றனர். பின்னர் இவர்களிருவரும் கைது செய்யப்பட்டு சிறையிலிருந்தபோது இவர்களுக்கு ஒரு குழந்தையும் பிறந்தது.

இவர் தனு, சுபா ஆகிய இருவருடனான அறிமுகங்களின் பின் அவர்களுடன் மிகவும் நெருங்கிப் பழகியவர். சம்பவதினமான 91.05.21 அன்று சுபா, தனு, சிவராசன் ஆகியோருடன் இவர் சிறிபெரும்புதூருக்குச் சென்றுள்ளார். இதற்கு ஆதாரமாக சம்பவ இடத்தில் எடுத்த புகைப்படத்தில் இவரும் நிற்கிறார். எனவே இவர் சதியில் முழுமையாக ஈடுபட்டு அம்மூவருக்கும் உதவியாக இருந்தார் என்பது இவர் மீதுள்ள பொலிஸ் தரப்புக் குற்றச்சாட்டு. இவர் கைதுசெய்யப்பட்டபின் இவரிடத்தில் பொலிஸார் ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தைப் பெற்றுள்ளனர். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 91.05.21 அன்று மாலை 3மணிக்கு நளினியின் வீட்டிலிருந்து சிவராசன், தனு, சுபா ஆகியமூவரும் புறப்படுவதற்கு சற்று முன்பதாக " தனு இன்று வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு காரியம் செய்யப்போகிறார். சிறிபெரும்புதூரில் அவர் ராஜீவ் காந்தியை கொலை செய்யப் போகிறார்" என சுபா, நளினியிடம் சொன்னதாகவும், இதைக்கேட்ட நளினி எந்தவித அதிர்ச்சியுமடையாமல் சிரித்துகொண்டு சென்றதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஒப்புதல் வாக்குமூலத்தினை உண்மையாகக் கொடுத்த வாக்குமூலம் என எடுத்துக்கொண்டாலும் கூட மாலை 3 மணிக்குத்தான் சதியைப்பற்றி நளினிக்குத் தெரியுமென நாம் கருதலாம். அதற்கு முதல் இந்தச் சதியைப் பற்றி நளினிக்குத் தெரியுமென பொலீஸ் தரப்புவாதம் கூட இல்லை. இந்த வழக்கினைப் பொறுத்தவரை நளினி செய்ததெல்லாம் குற்றஞ்சாட்டப்பட்ட இரண்டாவத எதிரி முருகனை காதலித்துத் திருமணம் செய்தது. ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டதின் பின் இருதடவை திருப்பதிக்குச் சென்று வந்தது. சிவராசன்– தனு– சுபா ஆகிய மூவருடனும் சிறீபெரும்புதூர் கூட்டநிகழ்ச்சிக்கு சென்றது என்பதினைத் தவிர நேரடியாக ராஜீவ் காந்தி கொலை செய்யப்படுவதற்கு உடந்தையாக இருந்தார் என்பதாக இவர் மீது குற்றச்சாட்டு கிடையாது. இவர் சிவராசன்–தனு–சுபா ஆகிய மூவருடனும் சேர்ந்து சிறீபெரும்புதூர் சென்றார் என்ற ஒரேயொரு காரணத்திற்காக இந்த வழக்கில் நீதிமன்றம் இவருக்கு தூக்குத்தண்டனை வழங்கியுள்ளது.

2



## முருகன்

***குற்றஞ்சாட்டப்பட்ட 2 வது எதிரி.***

***இலங்கைத் தமிழர்.***

இவர் 91 ம் ஆண்டு ஜனவரி மாதம் இந்தியாவிற்கு வருகிறார். இவர் 21 வது எதிரி பத்மாவின் வீட்டில் தங்கியிருந்தபோது இந்த வழக்கில் 18வது எதிரி பேரறிவாளன். 20வது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# இவர்கள் யார்? என்ன செய்தார்கள்?

எதிரி பாக்கியநாதன் ஆகியோருடன் ஏற்பட்ட அறிமுகங்களினூடாக 1வது எதிரி நளினியுடன் நட்பு ஏற்பட்டது. பின்னர் இந்த நட்பு காதலாக மாறி இவ்விருவரும் அடிக்கடி சந்தித்து வந்தனர். இவர் ஏப்ரல் மாத இறுதியில் இலங்கைக்குச் செல்வதற்காக கோடியார்கரைக்குச் சென்று, பின் கோடியார்கரையில் படகு வரவில்லை என ஒரு சாட்டைச் சொல்லிவிட்டு நளினியை விட்டுப் பிரிந்துசெல்ல மனமில்லாமல் மீண்டும் சென்னை வந்து நளினியுடன் தங்கியுள்ளார். ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டதின் பின் இவர் நளினியுடன் திருப்பதி சென்று திருமணம் செய்து கொள்கிறார். பின்னர் மதுரை, விழுப்புரம், பெங்களூர் என பல ஊர்களுக்குச் சென்று மீண்டும் சென்னை வந்தபோது அங்கே வைத்து இவர்கள் கைதுசெய்யப்பட்டார்கள்.

இவர் இந்தியா வந்து விவேகானந்தாக் கல்லூரியில் ஆங்கிலம் கற்றுக்கொண்டார். அங்கே ஆங்கிலம் கற்ற காலங்களில் நளினியுடன் ஏற்பட்ட காதலின் அடிப்படையில் அவரைத் திருமணம் செய்து இரண்டு, மூன்று இடங்களுக்குச் சென்று வந்தார். இதனைவிட, இவ்வழக்கினைப் பொறுத்தவரை இவர் ராஜீவ் காந்தி கொலையில் நேரடியாகச சம்பந்தப்–பட்டவரென இவர்மீது பொலீஸ் தரப்பில் எந்தவிதமான குற்றச்சாட்டுக்களுமில்லை. ஆனால் நீதிமன்றம் இவைகளை எல்லாம் கவனத்திற்கெடுக்காது இவருக்கும் தூக்குத்தண்டனை வழங்கியுள்ளது.

## சாந்தன்


***குற்றஞ்சாட்டப்பட்ட 3 வது எதிரி.***

***இலங்கைத் தமிழர்.***

91.05.01 அன்று சிவராசனுடன் படகில் தமிழகம் வந்த எட்டுப்பேரில் இவருமொருவர். பொலிஸ் தரப்பு சாட்சியங்களின் படி கோடியார்கரையில் வந்திறங்கிய இவர் 05ம் திகதி சென்னை வந்து ஏற்கெனவே அவருக்கு அறிமுகமாய் இருந்த புகைப்படப்பிடிப்பாளர் ஹரிபாபு வீட்டில் பத்துநாட்கள் தங்கியிருந்தார். அதற்குப்பின் வெளிநாடு செல்வதற்காக 15வது எதிரி சண்முகவடிவேலுவை அணுகி அவரது உதவியோடு ஒரு ட்றவல் ஏஜென்சியிடம் சென்றார். அங்கே 80000 ரூபா இந்தியப்பணத்தில் கொடுத்து கடவுச்சீட்டும் பெற்று வெளிநாடு செல்வதற்காக ஏற்பாடுகள் செய்தார். இவ்வாறு அவர் ஏற்பாடுகள் செய்தபோது ஹரிபாபு வீட்டில் தொடர்ந்து தங்குவதற்கு வசதிகள் இல்லையென்பதால் ராபட் பயஸ், ஜெயக்குமார், விஜயன் ஆகியோர் வீட்டில் மாறிமாறி தங்கியிருக்கிறார். இவ்வாறு இவர் தங்கியிருந்தபோது சிவராசனை அடிக்கடி சந்தித்துள்ளார். அத்தோடு சண்முக வடிவேலுவுடன் சென்று இவ்வழக்கின் குற்றஞ்சாட்டப்பட்ட எட்டாவது எதிரி ஆதிரையையும் அந்த இலங்கைத் தமிழர் வீட்டில் இரண்டொருமுறை சென்று சந்தித்திருந்தார். இவ்வடிப்படையில் இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட சிலரின் வீடுகளில் தங்கியிருந்து வெளிநாடு செல்வதற்காக கடவுச்சீட்டு எடுக்கமுயற்சித்தார் என்பதைத் தவிர ராஜீவ் காந்தி கொலைச் சதியில் இவர் நேரடியாக ஈடுபட்டார் என்பது தொடர்பாக பொலீஸ் தரப்பில் இவர்மீது எந்தக்குற்றச்சாட்டுக்களும் வைக்கப்படவில்லை.

91.05.01ல் இவர் சிவராசனுடன் ஒன்றாக தமிழகம் வந்தவர். இதனால் சாந்தனுக்கு ராஜீவ் காந்தி கொலை பற்றிய சதிதிட்டம் தெரிந்திருக்கலாம். இவ்வனுமானங்கள் சாந்தனுக்கு இச்சதியில் நேரடியான பங்கிருக்கலாம் என நீதிமன்றத்தினை அனுமானிக்கவைத்தது. இவ்வடிப்படையிற்தான் இவருக்கும் நீதிமன்றத்தினால் தூக்குத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

3





www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குரல் 2

# இவர்கள் யார்? என்ன செய்தார்கள்?

சாந்தன் 91 ம் ஆண்டு ஏப்ரல் [illegible] கடைசிவாரத்தில் சண்முகவடிவேலுவுடன் சென்று ஒரு ட்றவல் ஏஜென்சியிடம் பயணச்[illegible] வாங்கினார். இதற்கு சண்முகவடிவேலு உதவிசெய்தார் எனக்குறிப்பிட்டு நீதிமன்றம் ச[illegible]வேலுவுக்கும் தூக்குத்தண்டனை வழங்கியுள்ளது.

சாந்தனின் குற்றப்பத்திரிகையில் அ[illegible] 91.05.01 அன்று தான் இலங்கையிலிருந்து இந்தியா வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. [illegible]ப்படியெனில் அவர் எப்படி ஏப்ரல் 28ம் திகதி சண்முகவடிவேலுவுடன் சென்று ட்[illegible]ல் ஏஜென்சியிடம் வெளிநாடு செல்ல பயணச்சீட்டு வாங்கியிருக்கமுடியும்? இந்த சந்தேக[illegible]ள எல்லாம் நீதிமன்றம் கருத்தில் எடுக்காமலேயே சாந்தனுக்கு தூக்குத்தண்டனை [illegible]

## விஜயானந்தன்.

***குற்றஞ்சாட்டப்பட்ட 4வது எதிரி.***

***இலங்கைத் தமிழர்.***



இவர் யாழ்ப்பாணத்திலுள்ள நூலகம் ஒன்ற[illegible]ப்பாளராக இருந்தவர். இவர் 91.05.01 அன்று யாழ்ப்பாணத்திலிருந்து தமிழகத்தி[illegible] கோடியார்கரை எனும் கிராமத்திற்கு படகில் வந்தார். இந்தப்படகில் சிவராசன் மற்று[illegible]டு[illegible] இந்தியாவிற்கு வந்ததாக பொலீஸ் தரப்பின் குற்றச்சாட்டு. அந்த ஒன்பது பேரில் [illegible]யானந்த[illegible] ஒருவர். இவர் 91.05.06 வரை கோடியார்கரையிலேயே தங்கிவிட்டு 91.05.07 அ[illegible] சென்னை[illegible]து கோமளவிலாஸ் எனும் விடுதியில் தங்கினார். அவர் இவ்விடுதியில் 91.[illegible]7வரை தங்கியிரு[illegible] இவர் இவ்விடுதியில் தங்கியிருந்த போது தனது இலங்கை முகவ[illegible]க் குறிப்பிடாது த[illegible]ல் இராமநாதபுர மாவட்டத்தின் ஒரு கிராமத்திலுள்ள முக[illegible]யைக் கொடுத்தே அங்[illegible] தங்கியிருந்தார். 91.05.09 அன்று சிவராசன் தனது மோட்டா[illegible]சக்கிளில் இவரை அழைத்து[illegible]ண்டுபோய் வசந்தகுமார் என்பவருடைய வீட்டில் தங்க[illegible]த்தார். அந்த வீட்டில் தங்கியிருக்[illegible] வேளை வசந்தகுமாரின் உதவியுடன் தான் பொறுப்ப[illegible]ருக்கும் யாழ் ப்பாணத்திலுள்ள நூல[illegible]திற்கு எடுத்துச்செல்வதற்காக பல்வேறு வெளி[illegible]ாளர்களிடமும் புத்தகக்கடைகளிலும் [illegible] இந்திய ரூபாய்கள் பெறுமதியான பு[illegible]ங்களை வாங்கிவந்து யாழ்ப்பாணத்[illegible] எடுத்துச்செல்வதற்காக கட்டுகளாக கட்[illegible]வைத்திருந்தார். அதற்குப்பின் 91.05.21 அன்[illegible] ராஜீவ் காந்தி கொலைசெய்யப்பட்[illegible]ன் இவர் இலங்கை செல்வதற்கு படகு கிடைக்கவில்லை.

இவரால் இலங்கை செல்வதற்கு படகு [illegible] செய்யமுடியவில்லை. இவருடன் 91..05.01 அன்று படகில் வந்த சிவராசனையோ மற்[illegible]ர்களையோ சந்திக்க இவரால் முடியவில்லை. அதனால் இவர் இலங்கைக்குப் போகாது[illegible]ங்கேயே தங்கிவிடுகிறார். இவ்வாறு இவர் இந்தியாவிலேயே தங்கிவிட்ட பிறகு பொ[illegible] விசாரணையின் போது 91.05.01 அன்று சிவராசன் வந்த படகில் அவருடன் வந்த [illegible]டுப்பேரும் யார், யாரெனப் பார்த்த போது விஜயானந்தன் என்பவரின் பெயருமிருப்பதால் [illegible]ரைப் பொலிசார் கைதுசெய்தனர். பின்னர், கைது செய்யப்பட்ட இவர்மீது ராஜீவ் கா[illegible] கொலை தொடர்பாக குற்றவாளியாகக் கருதப்பட்டு வழக்குத்தொடரப்பட்டது. வழக்[illegible] முடிவில் நீதிமன்றத்தினால் இவருக்கு தூக்குத்தண்டனை வழங்கப்பட்டது. இத்தனை[illegible] இவர் இந்தியா வந்து செய்த ஒரேயொரு காரியம் யாழ்ப்பாணத்திலுள்ள நூலகத்திற்கு[illegible]ண்டிய புத்தகங்களை வாங்கியது மட்டுமே. ஆனால், நீதிமன்றம் எந்த அடிப்படையில் [illegible]ருக்கு தூக்குத்தண்[illegible] வழங்கியது எனப்பார்த்தால்,

1. 01.05.91 அன்று இவர் சிவராசனுடன் சேர்ந்து படகில் இந்தியா [illegible]
2. சென்னையில் கோமளவிலாஸில் இவர் தங்கியிருந்தபோது தனது இலங்கை முகவரியைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இவர்கள் யார்? என்ன செய்தார்கள்?


குறிப்பிடாது இராமநாதபுரமாவட்டத்தில் ஒரு கிராமத்திலுள்ள முகவரியைக் கொடுத்தது. இந்த இரு அம்சங்களுக்கும் முடிச்சுப்போட்ட பொலிஸார் இவர் 91..05.01 அன்று சிவராசனுடன் படகில் வந்தபோதே இவருக்கு ராஜீவ் கொலை பற்றிய சதித்திட்டம் தெரிந்திருக்கிறது, அதனாலேயே இவர் கோமளவிலாஸில் தங்கியிருந்தபோது தனது இலங்கை முகவரியை குறிப்பிடாதுவிட்டார் என அனுமானித்து இவரும் கொலைச்சதியில் ஈடுபட்டார் என குற்றஞ்சாட்டி நீதிமன்றம் இவருக்கு தூக்குத்தண்டனை வழங்கியுள்ளது. ஆனால், இவர் கொலைச்சதியில் ஈடுபட்டாரென்பதற்கு எந்தவித ஆதாரங்களும் நீதிமன்றத்தில் அரசு தரப்பினால் சமர்ப்பிக்கப்படவுமில்லை. இவருக்கு இந்த சதித்திட்டம் பற்றி ஏற்கெனவே தெரிந்திருந்தது என பொலிஸ்தரப்பில் குற்றஞ்சாட்டப்படவுமில்லை. பொதுவாக, அந்தக்காலத்தில் இலங்கையிலிருந்து நேரடியாக வராமல் படகில் வருபவர்கள் தமது யாழ்ப்பாண முகவரியை குறிப்பிட சாதாரணமாக தயங்குவது இயற்கை. அந்த அடிப்படையிற்தான் இவர்கூட தன் இலங்கை முகவரியை குறிப்பிடாது விட்டார். இதனை நீதிமன்றம் கவனத்திற்கொள்ளாது வெறும் அனுமானத்தின் பெயரில் இவருக்கும் தூக்குத்தண்டனை வழங்கியுள்ளது.

## சங்கர்

***குற்றஞ்சாட்டப்பட்ட 5வது எதிரி.***

***இலங்கைத் தமிழர்.***

5




91.05.01 அன்று சிவராசனுடன் இந்தியா வந்த எட்டுப்பேரில் இவரும் ஒருவர். இந்த எட்டுப்பேரும் யார், யாரென இந்தியப் பொலிஸரால் விசாரிக்கப்படுகின்றபோது இவரது பெயரும் இருந்தது. இறுதியில் 91 ம் ஆண்டு யூன் மாதம் 7ம் திகதி பொலீஸரால் கைதுசெய்யபட்டார். இவரும் சிவராசனுடன் இணைந்து தமிழகம் வந்து ராஜீவ் காந்தி கொலைச்சதியில் உடந்தையாக இருந்தார் என்பது இவர் மீதான பொலிஸ் தரப்புக் குற்றஞ்சாட்டு. இந்த குற்றச்சாட்டின் பெயரில் நீதிமன்றத்தில் எந்த சாட்சிகளும் விசாரணைசெய்யப்படவில்லை. ஆனால் நீதிமன்றம் எல்லோருக்கும் போல் இவருக்கும் தூக்குத்தண்டனை வழங்கியுள்ளது.

## ரூபன்

***குற்றஞ்சாட்டப்பட்ட 6வது எதிரி.***

***இலங்கைத்தமிழர்.***

6



இவரும் 91.05.01 அன்று யாழ்ப்பாணத்திலிருந்து வந்த படகில் சிவராசனுடன் வந்த எட்டுப்பேரில் ஒருவர். இவர் கோடியார்கரையில் இறங்கி சென்னை வந்து தங்கியுள்ளார். ஒரு காலினை இழந்த இவர் 91.05.17 அன்று பொய்க்கால் பொருத்துவதற்காக ஜெய்ப்பூர் சென்றார். ஜெய்ப்பூருக்கு சென்றபோது இவரை சிவராசன் ரயில்நிலையம் சென்று வழியனுப்பி வைத்தார். ஜெய்ப்பூர் சென்ற இவர் ஒரு விடுதியில் தங்கியுள்ளார். இவர் விடுதியில் நான்கைந்து நாட்கள் தங்கியிருந்தபோதுதான் ராஜீவ் காந்தி கொலைச்சம்பவம் நடைபெற்றது. கொலைச்சம்பவம் நடைபெற்றதின்பின் இவர் தங்கியிருந்த அந்த விடுதியை விட்டு வேறொரு விடுதிக்கு சென்று அங்கே ஏறத்தாள ஒருமாத காலம் தங்கியிருந்தார். இந்த விடுதியின் பொறுப்பாளர் இவருக்கு உதவியாக இருந்து மருத்துவமனைக்கு சென்று இவருக்கு பொய்க்கால் பொருத்துவதற்கான நடவடிக்கைகள் அத்தனையிலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குரல் 2


# இவர்கள் யார்? என்ன செய்தார்கள்?

உறுதுணையாகவிருந்தார். இவர் முதல் தங்கியிருந்த விடுதிக்கும், மாற்றலாகி வந்து தங்கியிருந்த விடுதிக்கும் இடைப்பட்ட தூரம் சுமார் 50 அடிதான். இவர் கால் ஊனம் என்கிற பெயரில் இந்தியா வந்து, பொய்க்கால் பொருத்துவது என்ற பெயரில் சிவராசன் தங்குவதற்கு மறைவிடம் ஏற்பாடு செய்வதற்காக ஜெய்ப்பூர் சென்றார், அதனாற்தான் இவர் ஒரு விடுதியிலிருந்து இன்னொரு விடுதிக்கு மறைமுகமாகச் சென்று தங்கியிருந்தார் என்பது இவர் மீதுள்ள பொலிஸ் தரப்புக் குற்றச்சாட்டு. ராஜீவ் காந்தி கொலை செய்யப்படுவதற்கு நான்கு நாட்கள் முன்னரே இவர் ஜெய்ப்பூர் சென்றுவிடுகிறார். ஜெய்ப்பூர் என்பது டில்லியிலிருந்து ஏறத்தாழ 150 மைல் தொலைவிலுள்ள இடம். சென்னையில் இருக்கின்ற சிவராசன் எப்படி ஜெய்ப்பூர் சென்றடையமுடியும்? ஜெய்ப்பூரில் இவர் தங்கியிருக்கிற இடமே ஒரு விடுதி. அந்த இடத்தில் சிவராசன் மறைமுகமாக தங்குவதற்கு இவர் எப்படி இடம் ஏற்பாடு செய்ய முடியும் என்கிற சந்தேகம் எழுந்தாலும், நீதிமன்றம் இவர் பொய்க்கால் பொருத்துவது என்ற போர்வையில் சிவராசன் மறைமுகமாக தங்குவதற்கு ஒரு இடம் ஏற்பாடு செய்வதற்காகத்தான் ஜெய்ப்பூர் சென்றார் என முடிவு எடுக்கிறது. அந்தக் காரணத்தினாற்தான் இவர் சிவராசனுடன் ஒரே படகில் யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருக்கிறார். எனவே, இந்த சதித்திட்டம் பற்றி ஏற்கனவே தெரியும் என்று நீதிமன்றம் கருதி இவருக்கும் தூக்குத்தண்டனை வழங்கியுள்ளது.

## கனகசபாபதி

***குற்றஞ்சாட்டப்பட்ட 7வது எதிரி.***

***இலங்கைத்தமிழர்.***



இவர் இவ்வழக்கின் எட்டாவது எதிரி ஆதிரையுடன் தமிழகம் வந்தவர். அப்போது இவருக்கு 72 வயது. பணியிலிருந்து ஓய்வு பெற்றவர். கண்பார்வை குறைவு. டில்லியில் சிவராசன் பாதுகாப்பாக தங்குவதற்கு ஒரு வீடு ஏற்பாடு செய்வதற்கான பணி இவரிடம் ஒப்படைக்கப்பட்டது என்பது இவர் தொடர்பான பொலிஸ் தரப்புக் குற்றச்சாட்டு. 91.07.01 அன்று இவரும் ஆதிரையும் டில்லிக்குச் சென்று விடுதி ஒன்றிற்குச் சென்றவுடன் கைது செய்யப்பட்டார்கள்.

முதலில் சென்னை வந்த இவர் உறவினர் வீட்டில் தங்கியிருந்தார். ராஜீவ் காந்தி கொலைசெய்யப்பட்ட பின், உறவினர் இவரிடத்தில் "தமிழர்கள் எல்லாம் காவல் நிலையத்தில் தங்களுடைய பெயரை அகதிகளாக பதிவு செய்துகொள்கிறார்கள். அதனால் நீங்களும் சென்று பதிவு செய்து கொள்ளுங்கள்" எனக் கூறினார். கனகசபாபதியோ அதற்கு மறுப்புத் தெரிவித்தார். இதனை வைத்து இவருக்கு ராஜீவ் காந்தி கொலைச்சதி பற்றி முன்னரே தெரிந்திருக்காவிட்டால் இவர் ஏன் பொலிஸ் நிலையத்தில் தனது பெயரை பதிவு செய்து கொள்ள மறுக்கவேண்டும்? எனவே இவருக்கு இச்சதித்திட்டம் பற்றி முன்னரே தெரிந்திருக்கவேண்டும் என நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டது.

இதே போன்றுதான் ஆதிரையும் ஒரு இலங்கைத் தமிழர் வீட்டில் தங்கியிருக்கிறார். 91.06.11 அன்று அந்த இலங்கைத்தமிழர் ஆதிரையையும் அழைத்துச் சென்று இலங்கை அகதியாக பதிவு செய்து கொண்டார். இதைப் பற்றி குற்றப்பத்திரிகையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. "ஆதிரை அகதியாக இந்தியா வருகிறார், அகதியாக தன்னைப் பதிவு செய்து கொள்கிறார். இதனூடாக சட்டத்தை ஏமாற்றி சதித்திட்டத்தில் பங்குபற்றுகிறார்" என்பது பொலிஸ் தரப்பு வாதம். எனவே, ஆதிரை அகதி எனப்பதிவு செய்து கொண்டதால் அவர்மீது பொலிஸார் சொல்கின்ற குற்றச்சாட்டு அவர் அகதி என்ற போர்வையில் தமிழகம் வந்து இந்த கொலைச்சதியில் கலந்துகொண்டார். ஆனால், கனகசபாபதி அகதியாக பதிவு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குரல் 2

# இவர்கள் யார்? என்ன செய்தார்கள்?

செய்து கொள்ளாததால் அவருக்கு இந்த கொலைச்சதியில் பங்கிருக்கிறது என்பது பொலிஸார் சொல்கின்ற குற்றச்சாட்டு. ஆக, இந்த அடிப்படையிற்தான் கனகசபாபதி மீதுள்ள குற்றம் நிரூபிக்கப்பட்டதாக கருதி நீதிமன்றம் அவருக்கு தூக்குதண்டனை வழங்கியுள்ளது.

## ஆதிரை (சந்திரலேகா)

8



***குற்றஞ்சாட்டப்பட்ட 8வது எதிரி.***

***இலங்கைத்தமிழர்.***

91.04.28 அன்று இவரும், கனகசபாபதியும் இலங்கையிலிருந்து தமிழகம் வந்து சென்னைக்கருகில் உள்ள தாம்பரம் எனும் கிராமத்தில் சில நாட்கள் தங்கிவிட்டு, அதற்குப்பின் சென்னையிலுள்ள ராயப்பேட்டையில் இலங்கைத்தமிழர் ஒருவரின் வீட்டில் சுமார் ஒன்றரை மாதகாலம் தங்கியிருந்தார்கள். 91.07.01 அன்று இவர்களிருவரும் டில்லிக்கு சென்றபோது கைது செய்யப்பட்டார்கள். இவர்கள் கைது செய்யப்பட்டபோது ஆதிரைக்கு வயது 17. சட்டப்படி இவர் பராயமடையாதவர் (Minor). இந்திய சட்டப்படி 18 வயது நிறையாத ஒருவரை மற்றக் கைதிகளுடன் இவரையும் அவர்கள் போன்ற ஒருவராக பாவிக்கக்கூடாது, மற்றக் குற்றவாளிகளைப்போல் இவரையும் கையாளக்கூடாது, இவருக்கென தனிநீதிமன்றம் இருக்கிறது. வயதானவர்களுக்காக நடாத்தப்படுகின்ற நீதிமன்றங்களில் இவரும் ஒரு குற்றவாளியாக சேர்த்து விசாரிக்கப்படக்கூடாது. இதற்கென Journal Court என்கிற நீதிமன்றங்கள் இருக்கின்றன. அந்த நீதிமன்றங்களிலேயே இவர் விசாரிக்கப்பட்டிருக்கவேண்டும். அந்த நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டிருந்தால் அதிக பட்ச தண்டனையாக ஐந்து ஆண்டுகள் சிறைத்தண்டனைதான் கொடுக்கப்படவேண்டும். அதுவும் சாதாரண சிறையில் அவர்கள் அடைக்கப்படக்கூடாது. அவர்களுக்கென தனியான ஒரு சிறைச்சாலை இருக்கிறது. அதில்தான் அவர்கள் கைதியாக சிறையிலடைக்கப்படவேண்டும். ஆனால், இந்த வழக்கில் மட்டும் 17 வயதான ஆதிரையை மற்றக் குற்றவாளிகளுடன் இணைத்து குற்றஞ்சாட்டி விசாரிக்கப்பட்டு, வழக்கத்திற்கு மாறாக தூக்குத்தண்டனை தீர்ப்பும் வழங்கப்பட்டிருக்கிறது. இவர் மீதுள்ள குற்றச்சாட்டு என்னவெனில் தாம்பரத்தில் தங்கியிருந்தபோது மே மாதம் 5ம் திகதி அன்று சிவராசன் இவரைப் பார்ப்பதற்காக வந்தார். அதற்குப்பின் 7ம் திகதி அன்று இவரை தாம்பரத்திலிருந்து ராயப்பேட்டையிலுள்ள ஒரு இலங்கைத்தமிழர் வீட்டிற்கு அழைத்துச் சென்று இவர் தங்குவதற்காக ஏற்பாடு செய்தார். அந்த வீட்டில் தங்கியிருக்கின்ற ஆதிரை அந்த இலங்கைக் குடும்பத்துடன் சேர்ந்து 8ம் திகதி அன்று தமிழகத்திலுள்ள பல்வேறு நகரங்களுக்கும் சுற்றுப்பயணம் சென்றார். சிதம்பரம், கும்பகோணம், மைசூர், பெங்களூர், ஊட்டி போன்ற இடங்களுக்கு சுற்றுப்பயணம் சென்ற இவர் 91.05.16 அன்று மீண்டும் சென்னைக்கு வந்தார். இதே தினத்தில் சிவராசன் அந்த இலங்கைத்தமிழர் வீட்டிற்கு வந்து இவரைப் பார்த்துவிட்டு போனார். அதற்க்குப்பின் பொலிஸ் தரப்புக் குற்றச்சாட்டின்படி கூட இவர் சிவராசனை சந்திக்கவேயில்லை. 91.07.01 அன்று இவரும், கனகசபாபதியும் ரயிலில் டில்லி சென்று, அங்கே கிருஸ்னா விடுதியில் அறை வாடகைக்கு எடுத்தபோது பொலிஸார் இவர்களைக் கைது செய்தனர். அங்கு ஆதிரையும் கனகசபாபதியும் சிவராசன் பாதுகாப்பாக தங்குவதற்கு இடந்தேடுவதற்காக டில்லி சென்றனர் என்பது பொலிஸ் தரப்புக் குற்றச்சாட்டு. சிவராசன சென்னையை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

குரல் 2

# இவர்கள் யார்? என்ன செய்தார்கள்?

விட்டுச் செல்லமுடியாமல் சென்னையிலேயே பதுங்கிக்கொண்டிருந்ததால், சிவராசன் சென்னையிலிருந்து 200 மைல் தூரத்திலுள்ள பெங்களூருக்கு நேரடியாக செல்ல முடியாமல் ஒரு டாங் (Tank) லொறிக்குள் பதுங்கிக்கொண்டே பெங்களூர் சென்றாரென்பது பொலிஸ் தரப்புக் குற்றச்சாட்டு. ஆனால், நிலமைகள் இப்படியிருக்க 2000 மைல் தொலைவிலுள்ள டில்லிக்கு சிவராசன் எப்படி செல்லமுடியும்? அங்கே போய் எப்படிப் பதுங்கியிருக்கமுடியும் போன்ற விடயங்களை கவனத்திற் கொள்ளாமலேயே ஆதிரை மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. அதற்காக இவருக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு தூக்குத்தண்டனை ஆகும்.

### ராபட் பயஸ் - *குற்றஞ்சாட்டப்பட்ட 9வது எதிரி.*

### ஜெயக்குமார் - *குற்றஞ்சாட்டப்பட்ட 10வது எதிரி.*

### சாந்தி - *குற்றஞ்சாட்டப்பட்ட 11வது எதிரி.*

ராபட் பயஸ், ஜெயக்குமார் இலங்கைத்தமிழர்கள் மட்டுமின்றி உறவினரும் கூட, பதினொராவது எதிரி சாந்தி இந்தியத்தமிழர், சென்னையைச் சேர்ந்தவர். பத்தாவது எதிரி ஜெயக்குமாரை திருமணம் செய்து கொண்டபின் சாந்தி இலங்கையில் சென்று வாழ்ந்தவர். இந்த மூவரும் 90ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் தமிழகத்திற்கு வந்தார்கள். இதில் ஜெயக்குமாரும், சாந்தியும் படகில் வந்து தூத்துக்குடியில் அகதிகள் முகாமில் தங்கினர். ராபட் பயஸ் முறையாக கடவுச்சீட்டு, விசாவுடன் இந்தியாவிற்கு வந்தவர். இவர்கள் முதலில் போரூர் என்ற இடத்தில் ஒரு வீடு வாடகைக்கு எடுத்து அங்கே தங்கியிருந்தார்கள். இவர்களுடன் சேர்ந்து சிவராசன் அங்கே தங்கியுள்ளார். இரண்டு மாதம் கழித்து, ஜெயக்குமாரும் சாந்தியும் கொடுங்கையூர் எனுமிடத்தில் ஒரு வீடு வாடகைக்கு எடுத்து, அங்கே தங்கி சிறிய வியாபாரம் நடத்தி வந்தார்கள். ராபட் பயஸ், ஜெயக்குமார் மீதுள்ள குற்றச்சாட்டு சிவராசன் தங்கியிருப்பதற்கு போரூர், கொடுங்கையூர் எனுமிடங்களில் வீடு வாடகைக்கு எடுத்துக் கொடுத்து சிவராசனுக்கு உதவியாக செயற்பட்டனர் என்பதாகும். இத்தோடு சிவராசன் மே மாதம் முதல்வாரத்தில் இந்தியாவிற்கு வந்த சுபா, தனு ஆகியோரோடு ஜெயக்குமார் வீட்டில் மாறி மாறி தங்கியிருந்தனர். இந்தியாவில் ஜெயக்குமாரும், ராபட் பயஸ் ஆகிய இருவரும் சிவராசன், தனு, சுபா தங்கியிருக்க வீடுகள் ஏற்பாடு செய்த காரணத்தினாற்தான் அம்மூவரும் இந்தியாவில் தங்கி ராஜீவ் காந்தியை கொலை செய்தனர். ஆகவே வீடு ஏற்பாடு செய்து தங்குவதற்கு வசதி செய்து கொடுத்த காரணத்தினால் ஜெயக்குமார், ராபட் பயஸ் ஆகிய இருவருக்கும் இந்தச் சதி பற்றி முன்னரே தெரிந்திருக்கவேண்டும். எனவே, இந்தச் சதியில் இவர்களுக்கு நேரடியாக பங்கிருக்கிறது எனக்கருதி நீதிமன்றம் இவர்களுக்கு தூக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இவர்களோடு சேர்ந்து ஜெயக்குமாரின் மனைவி சாந்திக்கும் தூக்குத்தண்டனை. சாந்தி செய்த ஒரேயொரு காரியம் அவர் ஜெயக்குமாரை திருமணம் செய்ததுதான். இதனைவிட அவர் இந்த வழக்கில் எந்தக் குற்றச்செயல்கள் செய்ததாகவும் சாட்சியம் எதுவும் இல்லை. மற்றும் ஜெயக்குமார், ராபட் பயஸ் ஆகிய இருவருக்கும் ராஜீவ் கொலையில் நேரடித் தொடர்பு இருக்கிறதென எந்தக் குற்றச்சாட்டுமில்லை. ஆனால் நீதிமன்றம் இவைகளை எல்லாம் கருத்தில் எடுக்காமல் இம்மூவருக்கும் தூக்குத்தண்டனை வழங்கியுள்ளது.

9



10



11





www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இவர்கள் யார்? என்ன செய்தார்கள்?

**விஜயன் -** *குற்றஞ்சாட்டப்பட்ட 12வது எதிரி.*

**செல்வலட்சுமி -** *குற்றஞ்சாட்டப்பட்ட 13வது எதிரி.*

**பாஸ்கரன் -** *குற்றஞ்சாட்டப்பட்ட 14வது எதிரி.*

விஜயன் இலங்கைத் தமிழர். இவரின் மனைவிதான் செல்வலட்சுமி, இந்தியத் தமிழர். செல்வலட்சுமியின் தந்தை பாஸ்கரன் இந்தியத் தமிழர். இவர் நீண்டகாலமாக இலங்கையில் வசித்தவர். இந்த மூவரும் 90ம் ஆண்டு டிசம்பர் மாதம் அகதிகளாக தமிழகம் வந்து தூத்துக்குடி அகதி முகாமில் 91 ஏப்ரல் வரை தங்கியுள்ளார்கள். அதன்பின் விஜயன் சென்னை வந்து கொடுங்கையூர் எனுமிடத்தில் ஒரு வீடு வாடகைக்கு எடுத்து தன் மனைவி செல்வலட்சுமி, மாமனார் பாஸ்கரன் ஆகியோரையும் அழைத்து வந்து அவ்வீட்டில் தங்கியிருந்தனர். 91.05.01 அன்று யாழ்ப்பாணத்திலிருந்து வந்த சிவராசன் தனுவையும், சுபாவையும் விஜயன் வீடு, ஜெயக்குமார் வீடு என மாறி மாறி தங்கவிட்டுள்ளார். விஜயன் தனது வீட்டில் தொலைதொடர்புக் கருவி வைத்து அதன்மூலம் இவர் யாழ்ப்பாணத்திற்கு செய்திகள் அனுப்பியதாகவும் இவரில் குற்றச்சாட்டு. எனவே, சிவராசன், தனு, சுபா ஆகிய மூவரும் தங்குவதற்கு வீடு ஏற்பாடு செய்து கொடுத்ததுடன் அவ்வீட்டில் வைத்து தொலைத்தொடர்பு கருவியை இயக்கி யாழ்ப்பாணத்திற்கு செய்திகள் அனுப்ப உதவினார் என்பதாலும் விஜயனுக்கும் சதியில் நேரடியான பங்கிருக்கிறது என நீதிமன்றம் கருதி இவருக்கும் தூக்குத்தண்டனை வழங்கியுள்ளது. இத்தீர்ப்பிலேயே மே மாதம் 17ம் திகதியன்று விஜயன் வீட்டின் சமையலறையில் ஒரு புதைகுழி தோண்டி தொலைத்தொடர்புக் கருவி மற்றும் அதற்குத் தேவையான உபகரணங்கள் யாவற்றையும் போட்டு மூடிவிட்டார்கள் எனவும், அதற்குப் பின் மே மாதம் 20, 28ம் திகதிகளில் விஜயன் வீட்டிலிருந்து தொலைத்தொடர்புக் கருவி மூலம் பல முக்கிய செய்திகள் அனுப்பப்பட்டதாக நீதிமன்றம் சொல்கிறது. 91.05.17 அன்று விஜயன் வீட்டு சமையலறையில் புதைகுழியில் போட்டு சீமெந்தால் மூடப்பட்ட தொலைதொடர்பு கருவி மூலம் எப்படி மேற்குறிப்பிட்ட மூன்று திகதிகளிலும் செய்திகள் அனுப்பியிருக்க முடியும் என்ற சந்தேகங்கள் எழுந்தாலும் கூட நீதிமன்றம் பொலிஸாரின் வாதங்களை ஏற்றுக்கொண்டு இந்த மூவருக்கும் சதியில் பங்கிருக்கிறது எனக் கருதி இம்மூவருக்கும் தூக்குத்தண்டனை வழங்கியுள்ளது. விஜயனுடைய மனைவி செல்வலட்சுமி, அவரின் மாமனார் பாஸ்கரன் ஆகிய இருவரும் விஜயனுடன் சேர்ந்து அவ்வீட்டில் தங்கியிருந்தனர் என்பதினைத் தவிர அவர்கள் மீது வேறெந்தக் குற்றச்சாட்டுக்களுமில்லை. விஜயனுக்கு மனைவியாக இருந்ததினால் செல்வலட்சுமிக்கும், செல்வலட்சுமியின் தந்தையாக இருந்ததினால் பாஸ்கரனுக்கும் தூக்குத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.


**சண்முக வடிவேலு -**

***குற்றஞ்சாட்டப்பட்ட 15வது எதிரி.***

***இந்தியத் தமிழர்.***

இவர் குடும்பத்துடன் சென்னையிலேயே நீண்ட நாட்கள் இருந்து வந்தார். சிவராசனுடைய டயறியில் இவருடைய பெயரை தம்பி அண்ணா என குறிப்பிட்டு அந்தப்பெயருக்கு நேராக ஒரு லட்சம் ரூபாய், இரண்டு லட்சம் ரூபாய் என சில இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது. இந்த டயறியை அடிப்படையாக வைத்து பொலிஸ் தரப்பு

12



13



14



15



www.tamilarangam.net

குரல் 2

# இவர்கள் யார்?
# என்ன செய்தார்கள்?

வாதப்படி இவர் சிவராசனுக்கு அந்தந்த திகதிகளில் பணம் கொடுத்து உதவியுள்ளார் என்பது இவர் மீதுள்ள குற்றச்சாட்டு. இதனைவிட இவர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ராஜீவ் காந்தி கொலையில் ஈடுபட்டார் என்பதற்கு எந்தவித சாட்சியங்களும் கிடையாது. ஆனால், இவருக்கும் தூக்குத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

16




## ரவிச்சந்திரன் - *குற்றஞ்சாட்டப்பட்ட 16வது எதிரி.*
## சுசீந்திரன் - *குற்றஞ்சாட்டப்பட்ட 17வது எதிரி.*

***இந்தியத் தமிழர்கள்.***

இவர்களிருவரும் சிவராசனுக்கு ஏற்கனவே இலங்கையில் வைத்து அறிமுகமானவர்கள். ராஜீவ் காந்தி கொலைப்பட்டதின் பின்பு சிவராசன், சுபாவை பொள்ளாச்சிக்கு அழைத்துச்சென்று அவர்களை இருநாட்கள் அங்கே தங்கவைத்துவிட்டு, மீண்டும் சென்னைக்கு அழைத்து வந்தார்கள். இதுதான் இவர்கள் இருவர் மீதான குற்றச்சாட்டு. இதனைவிட இவர்கள் இந்த சதித்திட்டத்தில் பங்குபற்றினார்கள் என்பதாக எந்தவித குற்றச்சாட்டுமில்லை. இவர்களுக்கும் யாவரையும் போலவே தூக்குத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

17




## பேரறிவாளன் -
## *குற்றஞ்சாட்டப்பட்ட 18வது எதிரி.*

***இந்தியத் தமிழர்.***

91.05.03 அன்று சிவராசன் இவரிடத்தில் ஒரு கார் பற்றறி வாங்கித்தரும்படி கேட்கின்றார். அதன்படி இவர் சிவராசனுடன் வந்த நேருவை அழைத்துச் சென்று ஒரு கார் பற்றறி வாங்கிக்கொடுத்தார். 91.05.04 அன்று சிவராசன் இவரிடத்தில் ஒரு மோட்டார் சைக்கிள் வாங்கித்தரும்படி பணம் கொடுத்தார். அந்தப்பணத்தைப் பெற்ற இவர் சிவராசனுக்கு ஒரு மோட்டார் பைக் வாங்கிக் கொடுத்தார். அதன்பின், மே மாதம் இரண்டாவது வாரத்தில் ஒரு சிறிய 9 valt!s பற்றறி வாங்கித்தரும்படி சிவராசன் இவரிடத்தில் கேட்டார். இந்த பற்றறிகளை இவர் எதற்காக சிவராசனுக்கு வாங்கிக்கொடுத்தார் என்பதற்கு எந்தவித சாட்சியங்களும் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படவில்லை. இவர் சதியை ப்பற்றி தெரிந்துதான் இந்த பற்றறிகளை சிவராசனுக்கு வாங்கிக்கொடுத்தார் என்பதற்கு எந்தவிதமான பொலிஸ்தரப்பு சாட்சியங்களுமில்லை. இவர் செய்ததெல்லாம் தெரிந்தவர் என்ற ரீதியில் சிவராசனுக்கு பற்றறி வாங்கிக்கொடுத்ததுதான். உதாரணமாக, ஒரு விடுதியில் இருப்பவர் விடுதியில் வேலைசெய்பவரை அழைத்து ஏதாவது ஒரு பொருள் வாங்கித்தரும்படி கேட்டால் அவர் வாங்கிக்கொடுப்பது போல, சிவராசன் கேட்டுக்கொண்டதற்கிணங்க இவர் பற்றறி, மோட்டார் சைக்கிள் வாங்கிக்கொடுத்தாரேயொழிய இவருக்கு நேரடியாக ராஜீவ்காந்தி கொலையில் சம்பந்தமிருக்கிறதென பொலிஸ்தரப்பில் எந்தவாதங்களுமில்லை. அப்படியிருந்தும் இவருக்கும் தூக்குத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

18





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இவர்கள் யார்? என்ன செய்தார்கள்?




19

## இரும்பொறை -

***குற்றம்சாட்டப்பட்ட 19வது எதிரி.***

***இந்தியத் தமிழர்.***

1991 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் கடலில் வைத்து இந்தியக் கடற்படையினரால் இவர் கைது செய்யப்பட்டார். குண்டுச் சாந்தனுக்கு தஞ்சம் அளித்து உதவியாக இவர் மீது தடாச்சட்டத்தின் கீழ் வழக்குத் தொடுக்கப்பட்டது. பின்னர் பத்மநாபா கொலை வழக்கிலும் இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது. மேற்குறிப்பிட்ட இரு வழக்குகளிலும் இவரைக் குற்றமற்றவர் என நீதிமன்றம் விடுதலை செய்தது. ஆனால் அதே குற்றச்சாட்டுக்களுக்காக ராஜீவ் காந்தி கொலை வழக்கில் நீதிமன்றத்தினால் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.



20



21

## பாக்கியநாதன் - *குற்றஞ்சாட்டப்பட்ட 20வது எதிரி.*

## பத்மா - *குற்றஞ்சாட்டப்பட்ட 21வது எதிரி.*

***இந்தியத் தமிழர்கள்.***

பாக்கியநாதன் 21வது எதிரி பத்மாவின் மகன். பத்மாவின் வீட்டிற்தான் இரண்டாவது எதிரி முருகனும் 18வது எதிரி பேரறிவாளனும் தங்கியிருந்தனர். இவர்களுடைய வீட்டிற்கு சிவராசன் இரண்டு, மூன்றுதடவை வந்து சென்றவர். இவர்கள் இருவரும் மீதான பொலீஸ் தரப்பு குற்றச்சாட்டுக்கள்.

1 .இரண்டாவது எதிரி முருகனை வீட்டில் தங்கவைத்திருந்தமை.

2. சிவராசன் இவர்களது வீட்டிற்கு வந்து சென்றவர்.

3. 21 வது எதிரி பத்மா இராஜீவ் காந்தி கொலையின் பின் 91.05.25 அன்று சிவராசன்,நளினி,சுபா ஆகியோருடன் திருப்பதிக்கு சென்று வந்தார் என்பவைகளைத் தவிர இவர்கள் நேரடியாக இந்த சதித்திட்டத்தில் ஈடுபட்டனர் என பொலிஸ்தரப்பில் எந்தவித குற்றச்சாட்டுக்களுமில்லை. ஆனால், நீதிமன்றம் இவைகளையெல்லாம் கருத்திலெடுக்காது இவர்களிருவருக்கும் தூக்குத்தண்டனை வழங்கியுள்ளது.



22

## சுபா சுந்தரம்

***குற்றஞ்சாட்டப்பட்ட 22 வது எதிரி.***

***இந்தியத் தமிழர்.***

இவர் ஒரு புகைப்படப்பிடிப்பாளர் சிறிபெரும்புத்தூர் சம்பவத்தில் ஹரிபாபு இறந்து விட்டார். அவருடன் ஒரு கமெரா இருந்தது என்ற செய்தியை அறிந்து "அந்த கமெராவை எடுத்து வந்திருந்தால் அதிலுள்ள புகைப்படங்களை உபயோகித்திருக்கலாமே" என சாட்சி தேழ்க்கொடி ராமமூர்த்தி என்ற இன்னொரு புகைப்படப்பிடிப்பாளரிடம் இவர் கூறினார். இவ்வாறு கூறியதானது, இவர் வேண்டுமென்றே தடயத்தை அழிக்க நினைத்தார். எனக் குற்றஞ்சாட்டப்பட்டு அந்தக் குற்றச்சாட்டின் அடிப்படையில் இவருக்கு தூக்குத்தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டது. இதனைவிட, இவர் இந்த சதியில் நேரடியாக ஈடுபட்டாரென பொலிஸ் தரப்பில் கூட எந்தவிதமான குற்றச்சாட்டுகளுமில்லை.

www.tamilarangam.net

குரல் 2

# இவர்கள் யார்? என்ன செய்தார்கள்?

**தனசேகரன்** - *குற்றஞ்சாட்டப்பட்ட 2 வது எதிரி.*

**ரங்கன்** - *குற்றஞ்சாட்டப்பட்ட 24 வது எதிரி.*

**விக்கி** - *குற்றஞ்சாட்டப்பட்ட 25 வது எதிரி.*


***இலங்கைத் தமிழர்கள்.***

இம் மூவரும் 91 ம் ஆண்டு யூன் மாதம் 28 ம் திகதி அன்று சிவராசன், சுபாவை சென்னையிலிருந்து பெங்களூருக்கு அழைத்துச் சென்றார்கள் என்பதே இவர்கள் மீதான பொலிஸ் தரப்புக் குற்றச்சாட்டு. அதுவும், ராஜீவ் காந்தி கொலைசெய்யப்பட்டு ஒன்றரை மாதங்களின் பின் சிவராசன்,சுபாவுக்கு உதவிசெய்தார்கள் என்பது மட்டுந்தான் இவர்கள் மூவரும் மீதான குற்றச்சாட்டு. மாறாக, இவர்கள் இந்த சதித்திட்டத்தில் நேரடியாக ஈடுபட்டார்கள் என்பதாக பொலிஸ் தரப்பில் எந்தவித குற்றச்சாட்டும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. இவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளில் கூட முரண்பாடுகள் இருக்கின்றன. ஆனால் நீதிமன்றம் இவர்களும் ராஜீவ் காந்தியைக் கொலைசெய்தார்கள் எனக் கருதி தூக்குத்தண்டனை வழங்கியிருக்கிறது.


23



24



25



26



**ரங்கநாத்**

***குற்றஞ்சாட்டப்பட்ட 26வது எதிரி.***

***இந்தியத் தமிழர் .***

ராஜீவ் காந்தி கொலைசெய்யப்பட்டு ஒன்றரை மாதங்களின் பின் சிவராசன், சுபா ஆகிய இருவரும் பெங்களூரில் இவருக்குச் சொந்தமான வீட்டில் தங்கியிருந்தார்கள். எனவே இவருக்கும் இந்தச் சதித்திட்டம் பற்றி முன்னமே தெரிந்திருக்க வேண்டுமென்ற அனுமானத்தின் அடிப்படையில் இவர் சிவராசன், சுபா ஆகிய இருவருக்கும் உதவி செய்தாரென நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டார். நீதிமன்றம் இவருக்கு இந்த சதித்திட்டம் பற்றி முன்னமே தெரியுமா? இவர் இந்தக் கொலைக்கு உடந்தையாக இருந்தாரா? போன்ற விடயங்களை கவனத்தில் எடுக்காமல் இவருக்கும் தூக்குத்தண்டனை வழங்கியுள்ளது.

***நீதிமன்றத்தினால் அதிகபட்ச தண்டனையான தூக்குத் தண்டனை வழங்கவேண்டிய கட்டாயம் இவர்களுக்கு ஏன் ஏற்பட்டது?*** ❑



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குரல் 3

# அரசியல் நீதி உயிர்ப்புடன் எழுமா?



உலகின் மிகப்பெரிய பயங்கரவாதம் 98.01.28 அன்று தமிழ்நாட்டில் நிகழ்ந்துள்ளது. பயங்கரவாதம் என்ற சொற்பதத்தால் மனித உரிமைகள் அமைப்பொன்று இதுவரை விபரிக்கப்பட்டு வந்த நிகழ்வுகளைவிட மிக ஆபத்தான, கொடூரமான இப் பயங்கரவாத செயற்பாட்டை 'நீதித்துறைப் பயங்கரவாதம்' என விபரித்திருக்கிறது. முன்னாள் பிரதமரும் நேரு குடும்பத்தின் வாரிசுமான ராஜீவ் காந்தி கொலைவழக்கில், குற்றம் சுமத்தப்பட்டுக் கைது செய்யப்பட்ட 26 பேருக்கும், தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட நிகழ்வே பயங்கரவாதத்தின் புதிய பரிமாணமாகும்.

கொலைவழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்குத் தூக்குத் தண்டனை வழங்கப்பட்டது ஏன்? அவர்கள் குற்றம் செய்தார்கள் என நிரூபிக்கப்பட்டமையாலா? அல்லது நீதித்துறை மீது அரசியல் செலுத்திய ஆதிக்கம் காரணமாகவா?

ராஜீவ் காந்தி கொலை வழக்கினை நுணுகி ஆராய்ந்து வந்தவர்களுக்கு உண்மை தெளிவாகப் புலப்படும். இக்கொலை வழக்கில் – கொலை வழக்கு விசாரணையில் நீதி என்பது ஆளும் அரசியலின் பக்கமாகவே நின்றிருக்கிறது. இதில் எந்தவித சந்தேகத்திற்கும் இருக்கவில்லை.

இக்கொலை வழக்கில் நீதி எவ்வாறு அரசியலால் தீர்மானிக்கப்பட்டது?ஏன் அரசியலால் நிர்ணயிக்கப்பட்டது?

ராஜீவ் காந்தி மனித குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டவுடன் விசாரணைகளை முடுக்கிவிட்ட புலனாய்வுத் துறையினர் விடுதலைப் புலிகளே இதனைச் செய்திருக்கிறார்கள் என்பது போன்ற ஒரு கருத்தினை ஏற்படுத்தினார்கள். கிடைத்த ஆதாரங்கள் எனக்கூறப்பட்டவை, இக்கொலையுடன் தொடர்புபட்டவர்கள் எனக் கூறப்பட்டவர்கள், இக்கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டவர்கள் என சகல முனைகளிலும் விடுதலைப் புலிகளே இதனைச் செய்தார்கள் என்றதான தோற்றப்பாடு உருவாக்கப்பட்டது. விசாரணை முறையில் இது ஒரு அடிப்படை தவறாகும். ஆனால் அத்தவறு தற்செயலானது அல்ல. அது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டது.

இலங்கைத்தீவில் தமிழீழம் உருவாகுவதற்கும், ஈழத்தமிழர்களுக்குத் தமிழீழம் எனும் தனியரசை அமைப்பதற்கும் எனப் போராடிவரும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் எதிரான மக்கள் அபிப்பிராயத்தினை உருவாக்குவதற்கு ராஜீவ் காந்தி கொலை விசாரணை திட்டமிட்ட முறையில் பயன்படுத்தப்பட்டது.

இதனை இங்கு குறிப்பிடும்போது விடுதலைப் புலிகள் மீது இந்தியப் புலனாய்வுத்துறை சந்தேகம் கொள்வதற்கான நிலமைகள் இருந்தமையினையும் மறுப்பதிற்கில்லை. ஆனால் விசாரணை நடைபெற்ற முறை விடுதலைப் புலிகளே இதனை மேற்கொண்டார்கள் என்ற முடிவில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது போன்றும் இக்கொலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வழக்கில் எப்படியாவது விடுதலைப் புலிகள் இயக்கத்தை தொடர்புபடுத்தி விட வேண்டும் என்ற 'வெறி' புலனாய் வாளர்களுக்கு இருந்தது என்பதனையும் எவருமே மறுதலித்து விட முடியாது. இக் கொலையுடன் தொடர்புபட்டவர்களாக கூறப்பட்டவர்களுக்கு விடுதலைப் புலிகள் இயக்கத் தொடர்பு இருந்தமைக்கான சில தகவல்கள் புலனாய்வுத் துறையினரிடம் இருந்தபோதும், விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் எடுத்த முடிவின் அடிப்படையில்தான் ராஜீவ் காந்தி கொலை நிகழ்த்தப்பட்டது என்பதனை உறுதிப் படுத்தும் எந்தவித தகவல்களோ அல்லது ஆதாரங்களோ புலனாய்வுத் துறையினரிடம் இருக்கவில்லை.

இருந்தபோதும், புலனாய்வுத் துறை யினர் விடுதலைப் புலிகளின் தலைமை ப்பீடமே இக்கொலையினை திட்டமிட்டு நடத்தியதாக கதை உருவாக்கினார்கள். தமது ஊகங்களையெல்லாம் முடிவாக்கி னார்கள், தமது விசாரணையின்போது வெளிவந்த பெயர்கள் உடையவர்களை-யெல்லாம் கைது செய்தார்கள், தமிழகத்தில் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு உறுதியான ஆதரவு தெரிவித்தவர்களை-யெல்லாம் அச்சுறுத்தும் வகையில் விசாரணைகளை மேற்கொண்டார்கள். இக்கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டவர்கள் மீது கொலையுடனும், கொலைச்சதியுடனும் தொடர்புபட்டதாகச் சித்தரிப்பதற்கு தமது மூளையை கசக்கிப் பிழிந்து 'குற்றப்பத்திரிகை' தாக்கல் செய்தார்கள்.

வழக்கு விசாரணை ஆரம்பிக்க முன்னரே விடுதலைப் புலிகள் அமைப்பும் குற்றஞ் சுமத்தப்பட்டவர்களும் குற்றவா-ளிகளாக சித்தரிக்கப்பட்டுவிட்டனர். வழக்கில் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டவர்களை குற்றம் சுமத்தப்பட்டவர்கள் என்றோ கொலைச்சந்தேக நபர்கள் என்றோ அழைப்பதற்குப் பதிலாக குற்றவாளிகள் என்றே பல பத்திரிகைகள் எழுதின. இதன் ஊடாக நீதிமன்ற விசாரணை ஆரம்பிப் பதற்கு முன்னரே இவ்வழக்கின் தீர்ப்பு எழுதப்பட்டுவிட்டது.

சாதாரண நீதித்துறை நடைமுறைகளை எல்லாம் மறுதலிக்கும் 'தடா' (TADA) சட்டத்தின் கீழேயே விசாரணை நடைபெற்றது. தாம் விரும்பும் எவர் மீதும் குற்றம் சுமத்தி தண்டனைக்கு உள்ளாக்கும் அதிகாரங்களை புலனாய்வுத்துறையிடம் வழங்கியுள்ள இத் தடா சட்டம் பலத்த கண்டனத்திற்குள்ளாகி தற்போது நீக்கப்பட்டு விட்டது. இருந்தபோதும் தடாவின் கீழ் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட ராஜீவ் கொலை வழக்கில் இத் 'தடா'ச் சட்டத்தின் அடிப்படையிலேயே 26 பேருக்கும் தூக்குத் தண்டனை வழங்கப்பட்டது. அரசியல் பழிவாங்கலுக்கு பயன்படுத்தக்கூடியதாக இருந்த மிகப்பெரிய ஆயதமான தடா சட்டம் என்ற அடித்தளத்தின் மீது இருந்தே ராஜீவ் கொலை வழக்கில் நீதியின் கழுத்தை அரசியல் திருகியிருக்கிறது.

தடா சட்டத்தின் கீழ் கூட 26 பேருக்கும் தூக்குதண்டனை வழங்கப் பட்டிருக்க வேண்டிய காரணமே இருக்கவில்லை. சாதாரண சட்டத்தின் கீழான விசாரணை என்றால் எதுவித குற்றமும் செய்யாதவர்களாக விடுதலையாகியிருக்கக் கூடிய இவ் 26 பேரும் தடா சட்டத்தின் கீழ் தாம் 5-7 வருட தண்டனைக்குள்ளாகக்கூடும் என எதிர்பார்த்தனர். ஆறு ஆண்டுகளுக்கு மேல் ஏற்கனவே சிறையில் இருந்து விட்டமையால் வழக்கு தீர்ப்பு வரும்போது தாம் விடுதலையாகி விடுவோம் என்று நம்பியிருந்தனர் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள். ஆனால் அவர்களின் எதிர்பார்ப்புக்கு மாறாக 26 பேருக்கும் தூக்குத்தண்டனை வழங்கப்பட்டமைக்கு பின்பாகவும் அரசியல் விளையாடியிருக்கிறது.

எத்தகைய அரசியல் காரணங்களுக்காக இக்கொலை வழக்கு பயன்படுத்தப்பட்டி ருக்கிறது என்பதைப் பின்வருமாறு தொகுக்கலாம்.

1. காங்கிரஸ் அரசால் மேற்கொள்ளப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்கு ஏற்பட்ட தோல்விக்கான பழிவாங்கல்.

2. இலங்கைத்தீவில் எழும் தமிழீழ எழுச்சி தமிழகத்திலும் உணர்வலைகளைத் தோற்றுவித்து தமிழ்நாட்டிலும் தன்னாட்சி உரிமைக்கான போராட்டம் தோற்றம் பெற்று எழுச்சி கண்டுவிடலாம் என்ற இந்திய ஆளும் வர்க்கத்தின் அச்சம். (1950-60களில் இடம்பெற்ற தனித்தமிழ்நாடு கோரிக்கையும் போராட்டங்களும் இவ்வச்சத்திற்கு எண்ணெய் வார்த்துக் கொண்டிருக்கிறது).

3. தமிழீழத்தில் விடுதலைப்புலிகளுக்குள் பிளவை ஏற்படுத்த அல்லது விடுதலைப் புலிகளுக்கு எதிரான மாற்றுத் தலைமையினை உருவாக்க முயலல். (ராஜீவ் கொலை நடைபெற்றபோது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரதித்தலைவராக இருந்த மாத்தையா மீது குற்றம் சுமத்தப்படாமை இங்கு கவனத்திற் கொள்ளப் படவேண்டியது).

4. தமிழகத்தில் ஆட்சி அமைக்கக்கூடிய தலைவர்களை அச்சுறுத்தி அடிபணிய வைத்தல்.

5. தமிழகத்தில் உள்ள தமிழின உணர்வாளர்களுக்கும், தமிழகத்துக்கான தன்னாட்சி கோரும் செயற்பாட்டாளர்களுக்கும் எச்சரிக்கையாக அவர்களை மிரட்டி அமைதிப்படுத்தும் நோக்கம்.

6. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலமையிலான போராட்டம் தமிழகத்திலும், இந்தியாவிலும் மாநில அளவில் எழுச்சியினை ஏற்படுத்தி - மாநிலங்கள் பலம் பெறுவதனைத் தடுப்பதற்கு வசதியாக விடுதலைப் புலிகள் மீது இந்தியாவில் தடை கொண்டுவருவதற்கான அடித்தளம் அமைத்தல்.

7. சிறிலங்காவில் அடைந்து கொள்ளக்கூடிய நலன்கள்.

மேற்குறிப்பிட்ட அரசியல் காரணங்களுக்காக ராஜீவ் காந்தி வழக்கில் நீதிக்கு தூக்குத் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. நீதியின் மேல் அரசியல் அதிகாரம் நிகழ்த்துவதற்கு காங்கிரஸ் ஆட்சியும், காங்கிரஸ் துணையுடன் செயற்பட்ட ஆட்சிகளும் உறுதுணையாக இருந்திருக்கின்றன. ஆனால் தற்போது இந்தியா வில் ஆட்சியமைத்துள்ள பாரதிய ஜனதா கட்சி கூட்டணி ஆட்சியில் நீதி உயிர்ப்புடன் எழுமா? ❑



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குரல் 4


# கார்த்திகேயன் கண்டுபிடித்த உண்மைகளும் கண்டுகொள்ளாத உண்மைகளும்

இருபத்தாறு பேருக்கு ஒட்டுமொத்தமாய்த் தூக்குத் தண்டனை வாங்கித் தந்த வெற்றிக் களிப்பு சிரிப்பாய்க் கொப்பளிக்க சிறப்புப் புலனாய்வுக் குழுத் தலைவர் கார்த்திகேயன் சொன்ன சொற்களை நாம் எளிதில் மறக்க முடியாது.

"வாய்மையே வெல்லும் என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது.

அத்தோடு நிறுத்தினாரா? இல்லை.

உண்மைகள், ஆதாரங்களின் அடிப்படையில் ராஜீவின் கொலைக்காரர்களைப் பிடிப்பது என் கடமை என்பது என் எண்ணம். இந்திய அரசு மென்மையான—தல்ல என்பதையும் பயங்கரவாதச்செயல்கள் தண்டனையிலிருந்து தப்ப முடியாது என்பதையும் பயங்கர வாதிகள் தெரிந்து கொள்ள வேண்டும்" என்று முழங்கியதோடு நில்லாமல் ராஜீவ் கொலையில் வேறெந்த அரசியல் வாதிகளுக்கும் தொடர்பில்லை என நற்சான்றிதழும் வழங்கினார். கலைஞர் உள்ளிட்ட தி.மு.க. நண்பர்களுக்கு இதில் ரொம்பத்திருப்தி.



அரசு, அதிகாரம் பற்றியெல்லாம் ஆழமாய்ப் பேசுகிற அறிஞர்கள், சட்டத்தின் நோக்கங்கள் என இரண்டைச் சொல்வார்கள்.

ஒன்று – சட்டஒழுங்குக்கு உட்பட்ட குடிமக்களை உருவாக்குவது.

மற்றது – சட்டபூர்வமான "உண்மைகளைக்" கண்டுபிடித்து அதாவது கட்டமைத்துத் தருவது.

சட்ட ஒழுங்குக் காவலர் கார்த்திகேயன் இதனை இரத்தினச் சுருக்கமாகச் சொல்லிவிட்டார். தான் கண்டுபிடித்த உண்மையை நீதிமன்றமும் ஏற்றுக்கொண்டுவிட்டது என்பது அவர் பெருமிதம்.

எப்படி இந்தச்சட்டபூர்வமான உண்மையைக் கார்த்திகேயனால் உருவாக்க முடிந்தது? நம்முடைய மூளையிலும் பார்வையிலும் இவர்களில் பலர் கொலைகாரர்களாகத் தென்படவில்லையே? நம்முடைய "உண்மையும்" காவல்துறையின் உண்மையும் எங்கே வேறுபடுகின்றன? கீழ்க்கண்டவாறு ஒரு வாக்குமூலம் அமைகிறது என வைத்துக்கொள்வோம்.

"அவன் ஒரு ஈழத்துப்பையன். பெற்றோர் இராணுவத்தாக்குதலில் செத்துப்போயிட்டாங்களாம். அகதி. அவன் பேசுகிற தமிழ் எனக்கு ரொம்பப்பிடிக்கும்." என் மகனுக்கு நண்பன். இந்த வயதில் இத்தனை இழப்புகளைச் சந்தித்த அவனுடைய சோகமான முகம் என்னை எப்போதும் வாட்டும். வீட்டுக்கு வரும் நேரங்களில் ஒரு வேளை சோறு போடுவதில் எனக்கொரு ஆறுதல். அன்றும் அவன் வந்தான். முகமெல்லாம் வேர்த்திருந்தது. பர பரப்பாக இருந்தான். சாப்பிடச் சொன்னேன். படுக்கச் சொன்னேன். மாத்திரை வாங்கி வந்து கொடுத்தேன். இரண்டு நாள் கழித்து ஊருக்குப் போகிறேன் என்றான். பெங்களூருக்கு ஒரு டிக்கட் வேண்டுமென்றான். அவனிடம் காசு இல்லை என்பது எனக்குத்தெரியும். நான் டிக்கட் வாங்கி வந்து கொடுத்தேன். அவன் போய்விட்டான்."

இந்தச் சொற்குவியலை ஒரு "கலிடாஸ் கோப்பு"க்கு ஒப்பிடலாம். வெவ்வேறு கோணங்களில் சாய்க்கும் போது வெவ்வேறு அர்த்தங்கள். மனிதநேய எழுத்தாளர் ஒருவருக்கு இது ஒரு பாசமுள்ள அன்னையின் பரிவு மிக்க சொற்கள். இந்தச் சொற் குவியல் அவருக்கு ஒரு மனிதநேயக் கதையாடலுக்கான கச்சாப்பொருள். ஒரு புலனாய்வுக் குழுத்தலைவருக்கோ இது ஒரு சட்ட ஒழுங்குக் கதையாடலுக்கான கச்சாப்பொருள்! ஏற்கனவே "குற்றச்செயல்" என வரையறுக்கப்பட்ட ஒரு நிகழ்வுதொடர்பான உண்மை! சொற்கூட்டத்திற்கும் அதன் வெவ்வேறு அர்த்தங்களுக்குமான உறவில் ஒன்றை மட்டும் உருவி எடுத்து "சட்டபூர்வமான உண்மை" இங்கே கட்டமைப்படுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பன்முகப் பரிமாணங்களுடைய சிக்கலான ஒரு மனிதப் பிரச்சனை இங்கே ஒரு "வழக்காக" சுருக்கப்படுகிறது. பரிவுமிக்க அன்னை ஒருவரின் பாசமிகு நடவடிக்கை மரண தண்டனைக்குரிய கொலைக்குற்றமாக வாசிக்கப்படுகிறது!

"வரலாறு", "குற்றச்செயல்," "கொலை" என்பதெல்லாம கூட இப்படிக் கதையாடல்கள் மூலம்தான் உருவாக்க ப்படுகின்றன. தனது ஆளுகைக்கு அப்பாற்பட்ட ஒரு சுதந்திர நாட்டின் உள்நாட்டுப்பிரச்சினையில் தலையிட்டு, தனது அதிகாரத்தை நிலைநாட்டும் ஒரே நோக்குடன் படை-களை அனுப்பி விடுதலைக்காக ஏங்கும் ஆயிரமாயிரம் அப்பாவி மக்களைக் கொன்று குவிப்பது, பாலியல் வன்முறைக்கு ஆளாக்குவது என்பதையெல்லாம் "வரலாற்றுக்கடமை"யாகக் கட்டமைக்கலாம். அதே நேரத்தில், இந்த நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட ஒரு குழுவினர் மேற்கொள்ளும் எதிர் நடவடிக்கை "கொலை"யாகவும் "குற்றச்செயலாகவும்" கட்டமைக்கப்படலாம். கதையாடல்கள் எதையும் செய்யும்.

இவ்வாறு பன்முகப்பட்ட கோணங்களில் ஒன்றை மட்டும் தேர்வு செய்தல் என்பது தவிர தான் உருவாக்கும் "உண்மை"க்கு முரணான எத்தனையோ "தரவு"களையும் "வாக்குமூலங்களையும்" சட்ட ஒழுங்குக் கதையாடல் மறைக்கும். மௌனமாக்கும்.

ராஜீவ் கொலைக்கதையாடலில் மவுனமாக்கப்பட்ட, மறந்த, மறைத்த, கண்டுகொள்ளப்படாத வேறு சில வாக்குமூலங்களைப் பார்ப்போம்.

வாக்குமூலம் 1 : மைய அரசின் முன்னாள் உள்துறை அமைச்சர் எஸ்.பி.சவான் ஜெயின் கமிஷன் முன்னால் சொன்னது: "சில அயல்நாட்டு சக்திகள் இந்தக்கொலையில் சம்பந்தப்பட்டுள்ளன என்பதுதான் இப்போதும் என்னுடைய கருத்து. இது விடுதலைப்புலிகளின் வேலை அல்ல. வேறு ஏதோ அந்நிய சக்திகள் அவர்கள் மூலமாக இதனைச்செய்துள்ளனர் என்பதுதான் பொதுக்கருத்து."

வாக்குமூலம் 2 : தமிழக அரசின் முன்னாள் காவல்துறை இயக்குநர் கே.மோகனதாஸ், விஜய் தொலைக்காட்சிப் பேட்டியொன்றில், "சிறப்புப் புலனாய்வுக் குழுவின் பாதுகாப்பில் இருந்த மிராகதாரர் சண்முகத்தின் சாவு ஒரு தற்கொலையல்ல. திட்டமிட்ட கொலை. விசாரணைக்கு அழைத்துச் செல்லும் போது வெள்ளை வேட்டி கட்டிக்கொண்டிருந்த சண்முகம் தூக்கில் தொங்கிய போது கைலி கட்டிக் கொண்டிருந்தது எப்படி? விடுதலைப் புலிகள் மாட்டிக்கொள்ளும்போது சயனைட் சாப்பிட்டுத் தற்கொலை செய்து கொள்வதுதானே வழக்கம். சிவராசன் மட்டும் துப்பாக்கிக் குண்டால் மரணமடைந்தது எப்படி?" இந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் டெல்லியிலிருந்து வெளிவரும் அவுட்லுக் இதழ் (97 நவம்பர் 24) கீழ்க் கண்ட ஐயத்தை எழுப்புகிறது. "சிவராசனோடு செத்துப்போன சுபாவின் உடல் பாதுகாக்கப்பட்டு சாட்சியமாக்கப்பட்ட அதே நேரத்தில் சிவராசனின் உடல் உடனே கொளுத்தப்பட்டது ஏன்? ராஜீவின் கொலையோடு தொடர்புடையவர்களாகச் சொல்லப்படும் பலரின் மர்மமான மரணங்கள் எதைக்காட்டுகின்றன?"

வாக்குமூலம் 3 : ராஜீவ் காந்தியின் பாதுகாப்பு ஏற்பாடு தொடர்பான கோப்பு ( **எண்.8 – 1 – WR/JSS/90/VOL111**) மைய அரசின் தலைமை அமைச்சகத்தில் இருந்து 91ஆம் ஆண்டு முதல் காணாமல் போன இன்னொரு கோப்பின் எண். 1/12014/5/91-IAS/D111.

சந்திரசாமி மற்றும் சுப்பிரமணியசாமிக்கு வெளிநாட்டு ஏஜன்சிகளிடமிருந்து வந்துள்ள சில தகவல்கள் தொடர்பான கோப்பும் காணாமல் போயுள்ளது.

ஏப்ரல் 20, 1991 அன்று இரகசியத் தொலைத்தொடர்புச் செய்தி ஒன்று கண்டறியப்பட்டது. ராஜீவை டெல்லியில் கொல்வதா? சென்னையில் கொல்வதா? என்பது தொடர்பான செய்தி அது. இந்தக்கோப்பும் காணவில்லை. புலனாய்வுத்துறைகள் உள்துறை அமைச்சர் சவானிடம் கூறிய செய்திகள் தொடர்பான கோப்பு ஒன்றும் காணாமல் போயுள்ளது. சவான் அளித்த வாக்குமூலத்தில் இதனை ஒத்துக்கொண்டுள்ளார்.

காணாமல் போனவற்றில் முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட கோப்பு பின்னர் ஜெயின் கமிஷன் முன் சமர்ப்பிக்கப்பட்டது. இது தொடர்பாக வி.பி.சிங் அமைச்சரவைச் செயலாளர் வினோத்பாண்டே அளித்த வாக்குமூலம், "இந்தக்கோப்பில் 30.01.90 அன்று நான் எழுதிய குறிப்புகளைக் காணோம். முதல் ஐந்து பந்திகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன." பின்னர் ஜெயின் கமிஷன் முன் சாட்சியம் அளித்த ப.சிதம்பரம் கோப்பு திருத்தப்பட்டதை ஏற்றுக்கொண்டார். நான்கு ஆண்டுகள் கழித்து வேறு வழியில்லாமல் கோப்பு திருத்தி அமைக்கப்பட்டதை அரசு ஏற்றுக் கொண்டது.

வாக்குமூலம் 4 : சுப்பிரமணியசாமியின் ஜனதா கட்சியின் தமிழ் மாநிலப்பிரிவைச் சேர்ந்த வேலுசாமி ஜெயின் கமிஷன் முன் சாட்சியமளித்த போது ராஜீவ் காந்தியின் கொலையை ஒட்டிய தினங்களில் சந்திரசாமியும், சுப்பிரமணியசாமியும் சந்தேகதிற்குரிய முறையில் தமிழ் நாட்டில் உலவியதைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அப்போலோ மருத்துவ நிறுவனத் தலைவர் பிரதாப் ரெட்டிக்குச் சொந்தமான சிந்தூரி ஓட்டலில் சந்திரசாமி தங்கியிருந்துள்ளார்.

வாக்குமூலம் 5 : BCCI வங்கி ஊழல் தொடர்பாக விசாரணை செய்ய அமெரிக்க செனட் அவையின் உட்குழு ஒன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் அறிக்கையில் ஆயுதத்தரகன் அட்னான் கசோகி, சந்திரசாமி முதலியோருக்குமுள்ள தொடர்பு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது தொடர்பாகக் கொடுக்கப்பட்ட 84 மில்லியன் டாலர் தொகை ராஜீவ் கொலைக்குப் பயன்படுத்தப்பட்டு இருக்கலாம் என அக்குழுவின் தலைவர் வில்லியம் கேரி கருத்துத் தெரிவித்துள்ளார்.

இந்தத் தரவுகள், வாக்குமூலங்கள் எல்லாம் கார்த்திகேயனுக்கு அர்த்தமற்ற உளறல்கள். ஏனெனில், அவர் கண்ட உண்மைக்கு இது ஒத்துவராதவை. ஏன் எதிரானவையும் கூட!

**அ. மார்க்ஸ்**

**நன்றி: நந்தன்**
**பெப்ரவரி 15'98.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குரல் 5

# கண்ணுக்கு கண்

**(திரு.ஐ.மல்லிகார்ஜுன் சர்மா, ஐதராபாத்தைச் சேர்ந்த முதுபெரும் மார்க்சிய அறிஞர். வெள்ளையருக்கு எதிரான போராட்டங்களில் பங்கேற்றவர். ஒன்றுபட்ட இந்தியப் பொதுவுடமை இயக்கத்தில் நீண்டகாலத் தொடர்பு கொண்டிருந்தவர். ஐதராபாத்திலுள்ள மார்க்சிய ஆய்வு மையத்தின் சார்பில் இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களின் வரலாறுகளடங்கிய ஆங்கில நூலொன்றை வெளியிட்டுள்ள அவர், ராஜீவ் காந்தி கொலைவழக்குத் தீர்ப்புக் குறித்து கல்கத்தாவிலிருந்து வெளியாகும் ஆங்கில வார ஏடான FRONTIER 28.02.98 இதழில் வெளியிட்டுள்ள அறிக்கையின் தமிழாக்கத்தைக் கீழே தந்துள்ளோம்.)**

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 26 பேருக்கு (அதாவது குற்றம் சாட்டப்பட்ட அனைவருக்கும் அல்லது கிட்டத்தட்ட அனைவருக்கும்) மரண தண்டனை வழங்கப்பட்ட செய்தியைப் படித்து அதிர்ச்சியடைந்தேன். நாம் நவீன ஜனநாயக யுகத்தில் தான் வாழ்கிறோமா அல்லது 'கண்ணுக்குக் கண்', 'பல்லுக்குப் பல்' என்பது சட்ட நியதியாக இருந்த மத்திய காலக் காட்டுமிராண்டி யுகத்தில் வாழ்கிறோமா என்ற வியப்பு மேலிட்டது எனக்கு. அந்தக் காட்டுமிராண்டி கால சட்ட நியதியையும் கூடத் தாண்டி சென்றுவிட்டது இந்தத் தீர்ப்பு. எனக்கு சௌரிசௌரா நிகழ்ச்சிதான் உடனடியாக நினைவுக்கு வந்தது. இன்றைய உத்தரப் பிரதேசத்திலுள்ள சௌரிசௌரா கிராமத்தைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட சுதந்திர வேட்கை கொண்ட கிராமவாசிகளுக்கும் தேசிய விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகள் மரணதண்டனை விதித்தனர். அவர்கள் அங்கிருந்த காவல் நிலையத்தை தாக்கி 22 காவல்காரர்களை கொன்றனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் வழங்கப்பட்ட தீர்ப்பு தான் அது. காவல் நிலையத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு மூலகாரணம், அமைதியாக நடைபெற்ற ஒரு ஊர்வலத்தின் மீது எவ்வித ஆத்திரமூட்டலுமின்றி பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தி, சில கிராமவாசிகளின் உயிரைப் பறித்ததுதான். பின்னர் மேல்முறையீட்டு நீதிமன்றங்கள், அவர்களில் பெரும்பாலானோரின் மரணதண்டனையை ஆயுள் தண்டனையாக குறைத்தன. எனினும் இறுதியில் 22 பேர் தூக்கிலிடப் பட்டனர். சுதந்திரத்துக்கு பிந்திய இந்த இந்தியாவில் மேல் முறையீட்டு நீதிமன்றங்கள் எந்த அளவுக்கு 'பெருந் தன்மை'யுடன் நடந்து கொள்ளப் போகின்றன என்பதைப் பொறுத் திருந்துதான் பார்க்க வேண்டும்.

அமைதிகாக்கும் படை என்ற பெயரில் ராஜீவ் காந்தியால் அனுப்பப்பட்ட இந்திய இராணுவம் இலங்கைத் தமிழர்கள் மீது நடத்திய பயங்கரமான வன்கொடுமைகளின் காரணமாகத்தான் அவரது உயிர் பறிக்கப்பட்டது. ஒரு அண்டை நாட்டின் விவகாரத்தில் முட்டாள்தனமாக தலையிட்டதன் காரணமாக இருதரப்பிலும் இன்னும் பல உயிர்கள் காவு கொடுக்கப்பட்டே தீரும். இந்தத் தீர்ப்பு இந்தியாவில் பயங்கரவாதம் வளர்வதற்குத்தான் பெருமளவில் காரணமாக இருக்கப் போகின்றதேயன்றி, அதைத் தடுப்பதற்கு அல்ல. ஊழல், அதிகார அரசியல், குறுகிய வெறி மனப்பான்மை மற்றும் இது போன்ற தீமைகளில் ஊறித்திளைத்துள்ள இந்நாட்டு நீதித்துறையும் சட்ட, நீதி முறைகளும் முழுமையாகச் சீர்படுத்தப்பட்டாலன்றி, நமது 'ஜனநாயக'த்திற்கோ அல்லது நமது நாட்டிற்கோ மீட்சி ஏதும் இருக்கப்

குரல் 6

# சாவை தடுப்பானா?

தை பிறந்தால் வழி பிறக்குமா?
தீர்த்து சொல்லு குயிலே!
இந்த் பொங்கலுக்காவது
என் மகன் வருவானா
எண்ணி சொல்லடி குயிலே!

களம் வென்று வந்தே—என்
கண்களை நிறைப்பானா?
நெருங்கி வரும் என்றன்
சாவை தடுப்பானா?

(தூக்குத்தண்டனை
விதிக்கப்பட்ட பேறறிவாளன்
தந்தை குயில்தாசன்
பொங்கலுக்கு நண்பர்களுக்கு
அனுப்பிய வாழ்த்து.)

www.tamilarangam.net








குரல் 7

# 26 பேருக்கு தூக்கு
# சர்வதேச மனித உரிமைக் கழகம் கண்டனம்








ராஜீவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 26 பேருக்கும், தனி நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்துள்ளதற்கு சர்வதேச மனித உரிமைக் கழகம் *(Amnesty International)* கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. அதன் அறிக்கை விபரம்:

இந்த வழக்கு விசாரணை நேர்மையாக நடக்கவில்லை. சர்வதேச நெறிமுறைகளும் பின்பற்றப்படவில்லை. தடா சட்டத்தின் கீழ் இந்த வழக்கு விசாரணை நடந்திருக்கிறது. தடா சட்டமே சர்வதேச நெறிமுறைகளுக்கு எதிரானது. விசாரணை ரகசியமாக நடத்தப்பட்டதும், சாட்சிகள் ரகசியமாக வைக்கப்பட்டதும், சர்வதேச நெறிமுறைகள் அல்ல. குற்றம் சாட்டப்பட்டவர்கள் 1991 யூலையில் கைது செய்யப்பட்டாலும், குற்றபத்திரிகை 1992 மே மாதத்தில் தான் தரப்பட்டிருக்கிறது. 1993 மே மாதம் வரை பூர்வாங்க விசாரணை கூட தொடங்கப்படவில்லை. கடைசியாக 1994 ஜனவரியில் தான் விசாரணையே தொடங்கியது. தடா சட்டத்தின் படி, குற்றம் சாட்டப்பட்டவர்கள் மேல்முறையீட்டுக்கு உயர்நீதிமன்றம் போக முடியாது. உச்ச நீதி மன்றம் தான் போக முடியும். இவைகள் எல்லாமுமே கவலை தரக்கூடியவைகளாகும். அதோடு கைது செய்யப்பட்டபோது ஆதிரை என்ற பெண்ணுக்கு வயது 17 தான். 18 வயதுக்குட்பட்ட குற்றவாளிகளுக்கு மரணதண்டனை விதிக்கக்கூடாது என்று சர்வதேச குழந்தைகள் உரிமைப்காப்பு ஒப்பந்தத்தின் 37 (a) விதி கூறுகிறது. ICCPR சட்டத்தின் 6(5) விதியும் இதைத்தான் கூறுகிறது.

1997ல் உருவான ஐ.நா. மனித உரிமைக் கமிஷன் தீர்மானமும் தூக்குத் தண்டனையை எதிர்க்கிறது. அத்தோடு தூக்குத் தண்டனையை இன்னும் அமுல்படுத்தி வரும் நாடுகள் அதை கைவிட வேண்டும் என்று வற்புறுத்துகிறது. இந்திய அரசியல் சட்டம் வாழ்வுரிமையை வலியுறுத்துகிறது. உச்ச நீதிமன்றமும் தூக்குத் தண்டனையை மிகமிக அபூர்வமாகவே பயன்படுத்த வேண்டும்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







என்று தீர்ப்பளித்திருக்கிறது. ஆனாலும் இந்தியாவில் ஆண்டுக்கு ஒரு டஜன் தூக்குத் தண்டனைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இப்படி தூக்கிலிடப்படுகிறவர்கள் பெரும்பாலும் ஏழைகள், படிப்பறிவு இல்லாதவர்கள் தான். எனவே இந்த 26 பேருக்கும் தூக்குத் தண்டனை தரப்பட்டதை எதிர்த்து தந்திகள், கடிதங்கள் அனுப்புங்கள்.

வழக்கு விசாரணைகள் சர்வதேச நெறிமுறைகளுக்கு உட்பட்டு நடக்கவில்லை என்பதையும், தீர்ப்பு ஐ.நா. மனித உரிமைக் குழுவின் தீர்மானத்துக்கு எதிரானது என்பதையும் உச்ச நீதிமன்றம் கவனத்தில் கொள்ளவேண்டும். குடியரசுத் தலைவருக்கும், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கும் தந்திகளும், கடிதங்களும் குவிய வேண்டும்.

முகவரி:

**திரு.கே.ஆர். நாராயணன்,**
**இந்திய குடியரசுத் தலைவர்,**
**குடியரசுத் தலைவர் அலுவலகம்,**
**ராஷ்டிரபதி பவன்,**
**புது டில்லி-110 004.**

**Telegrams: President, NewDelhi, India.**

**Faxes: +91 11 301 7290**

**Salutation: Dear President,**


**Justice M.M.PUNCHHI,**
**Chief Justic of India,**
**Supreme Court of India.**
**Tilak Marg, New Delhi 110 001**
**India.**
**Telegrams: Chief Justice,**
**New Delhi,**
**India.**
**Salutation: Dear Chief Justice,**

தந்திகள், கடிதங்களின் பிரதிகளை கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புங்கள்:

**Minister of Home Affairs,**
**Ministry of Home Affairs**
**North Block,**
**New Delhi-110 001, India.**
**Faxes:+91 11 301 5750.**









www.tamilarangam.net

குரல் 8

# அரசியல் உள்நோக்கம் கொண்ட தீர்ப்பு

ஒரு நாடகம் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்டு விட்டது. ராஜீவ் கொலை வழக்கு விசாரணையில் ஆரம்பத்திலிருந்து இறுதி வரை பல உண்மைகள் மூடிமறைக்கப்பட்டுள்ளன. விசாரணையும் ரகசியமாகவே நடத்தப்பட்டது. பத்திரிகையாளர்களும் பொதுமக்களும் அனுமதிக்கப்படவேயில்லை. ஒரு முன்னாள் பிரதமரின் கொலை பற்றிய விசாரணையைப் பகிரங்கமாக நடத்தியிருக்க வேண்டும். அவ்வாறு செய்தால் பொதுமக்கள் பல உண்மைகளை அறிந்து கொண்டிருப்பார்கள்.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் பலர் அளித்ததாக கூறப்படும் ஒப்புதல் வாக்குமூலங்களில் பல பக்கங்களில் குற்றஞ்சாட்டப்பட்டவரின் கையெழுத்து இல்லை. தடாசட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களிடம் பெறப்படும் ஒப்புதல் வாக்கு மூலங்களில் எந்தவொரு பக்கத்திலும் சம்பந்தப்பட்டவரின் கையெழுத்து இல்லாதிருந்தால், அந்த ஒப்புதல் வாக்குமூலமே செல்லாது என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. ஆனால், அதற்கு மாறாக கையெழுத்தில்லாத ஒப்புதல் வாக்கு மூலங்களின் அடிப்படையில் சிறப்பு நீதிமன்ற நீதிபதி தூக்குதண்டனை கொடுத்திருக்கிறார்.

இதைப்போல பல தவறுகளை ஆதாரபூர்வமாக சுட்டிக்காட்ட முடியும். புலன்விசாரணை தொடங்கிய கட்டத்திலிருந்து தீர்ப்பு வழங்கப்பட்ட கட்டம் வரை உள்நோக்கத்தோடு எல்லாமே நடத்தப்பட்டிருக்கிறது என்று நான் பகிரங்கமாக குற்றம் சாட்டுகிறேன். எந்த ஒரு வழக்கிலும் இதைப்போல போதுமான அளவுக்கு ஆதாரங்கள் இல்லாமல் தூக்குத்தண்டனை போன்ற கொடுந் தண்டனைகள் கொடுக்கப்பட்டதில்லை. எடுத்துக் காட்டாக விஜயன் என்பவரின் மனைவி செல்வலட்சுமிக்கு எதிராக ஒரு சாட்சி கூட எதுவும் கூறவில்லை. ஆனாலும் அவருக்கு மரணதண்டனை விதிக்கப் பட்டுள்ளது.

ஏறத்தாள ஆறாண்டுகாலம் இந்த வழக்கு விசாரணை நடைபெற்றிருக்கிறது. முதலில் நீதிபதி சித்திக் கிட்டத்தட்ட நாலரை ஆண்டுகள் இந்த வழக்கு விசாரணையை நடத்தினார். அவருக்குப்பின் பதவியேற்ற நீதிபதி நவநீதம் பதினைந்து மாதங்கள் மட்டுமே விசாரணை நடத்தியுள்ளார். ஏற்கனவே நாலரை ஆண்டுகாலம் நடைபெற்ற வழக்கு விசாரணை, வழக்கறிஞர்களின் குறுக்கு விசாரணை ஆகியவை அடங்கிய ஆவணங்கள் அனைத்தையும் மூன்றுமாத கால அவகாசத்தில் யாரும் பார்த்திருக்க முடியாது. இந்த நிலையில் அவசரத்தில் அள்ளித் தெளித்த கோலமாக இந்தத் தீர்ப்பு அமைந்திருக்கிறது. சத்தியத்தை பொய் மேகங்கள் மூடிமறைத்துள்ளன விரைவில் மேகங்கள் விலகி உண்மை வெளியாகும். ❑

பழ. நெடுமாறன்
தலைவர், தமிழர் தேசிய இயக்கம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குரல் 9

# நாளைக்கு தமிழகம் முழுவதையும்...

கவிஞர் இன்குலாப்

வேறொன்றும் சொல்வதற்கு இல்லை. நீதிமன்றங்களின் மூலமாகவும் இந்திய வல்லரசு உரிமை கோரும் தமிழர்களை மிரட்டிக் கொண்டிருக்கிறது என்பதைத் தவிர. இதற்கு முன்பு பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் மகன் பொழிலனுக்கும், அவர்தம் தோழர்களுக்கும் விதிக்கப்பட்ட ஆயள்தண்டனை இந்த அச்சுறுத்தலின் தொடக்கம் எனலாம். தமிழர்கள் அப்போதும் அசதியில் இருந்தனர். இப்பொழுது 26 பேருக்கும் மரணதண்டனை விதித்திருக்கிறது. இது அப்பட்டமான அச்சுறுத்தல்.

இதை நடுநிலையோடு விசாரணை செய்து, முறையாக வழங்கப்பட்ட தீர்ப்பாக ஏற்பதற்கில்லை. மூடிய அறைகளுக்குள் தொடங்கி நடத்தப்பட்ட விசாரணை, மூடிய அறைகளுக்குள் வழங்கப்பட்ட தீர்ப்பாக வெளிவந்திருக்கிறது. நீதிபதி வழங்கிய தீர்ப்பைச் சிறப்புப் புலனாய்வுக்குழு தலைவர் சொல்லித்தான் செய்தியாளர்கள் தெரிய வந்திருக்கிறார்கள். எத்தகைய குற்றங்கள் சுமத்தப்பட்டன? குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சொன்ன பதில்கள் யாவை? இதைத் தெரிந்து கொள்ளும் உரிமை மக்களுக்கு ஏன் இல்லாமற் போனது? அரசு நடத்தும் இப்படிப்பட்ட அடாவடித்தனமான நீதிமன்ற விசாரனை முறைகள் கேள்விக்கு அப்பாற்பட்டவையா? பூவிருந்தவல்லி சிறப்பு நீதிமன்றம், 2வது நாளாக நியாய நடைமுறைக்கும் மரணதண்டனை விதித்திருக்கிறது.

சத்தியமேவ ஜெயதே, வாய்மையே வெல்லும் என்றும், தேசத்தின் கொள்கை சரியென்று மெய்ப்பிக்கப்பட்டது என்றும் சிறப்புப் புலனாய்வுக்குழு தலைவர் புளகாங்கிதம் அடைந்திருக்கிறார். வெளிப்படையாக அல்லாமல் மூடிவைத்து விசாரணை நடத்துதான் சத்தியமே ஜெயதேவா? ராஜீவ் என்ற மனிதர் செய்த குற்றங்களும் ஊழல்களும்தான் தேசத்தின் கொள்கையா?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் சிறை, கைவிலங்கு, துப்பாக்கி, தூக்குக்கயிறு ஆகியவற்றையே அரசு விடையாக வைத்திருக்கிறது. எதிர்த்துக் கேள்வி கேட்க முடியாத பாசிச வெறி தலைவிரித்தாடுகிறது. இன்று 26 பேர், நாளைக்கு தமிழகம் முழுவதையும் தூக்கில் போடலாம்.

ஒரு ஜெயின் ஆணையம் அவமதித்தது என்றால், சிறப்பு நீதிமன்றம் தமிழகத்துக்குத் தூக்குத்தண்டனை விதித்திருக்கிறது.

**தமிழர்களே என்ன செய்யப் போகிறீர்கள்?**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குரல் 10

# நீதிமன்றத் தீர்ப்புக்கள் தேவவாக்குகள் அல்ல. . .

நீதிபதிகள் தேவதூதர்கள் அல்ல; நீதிபதிகளின் தீர்ப்புகளும் தேவ வாக்குகள் அல்ல. இப்படி நாம் சொன்னால், நம்மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடுக்கப்பட்டு, பயங்கரவாதிகளாக குற்றஞ்சாட்டப்பட்டு நமக்கும் தூக்குத் தண்டனை வழங்கப்படலாம். நமக்கெதற்கு வீண் வம்பு? வழக்குரைஞர்களுக்காக வழக்குரைஞர்களால் நடத்தப்படும் "லா டெல்லர்" (Law Teller சட்ட விளம்பி என அழகிய தமிழில் அழைக்கலாமா?) என்ற மாத இதழ் தன்னுடைய ஜனவரி 1998 இதழில் நீதிமன்ற தீர்ப்புக்களை விமர்சிப்பது பற்றி எத்தகைய கருத்தை வெளியிட்டுள்ளது என்று பார்ப்போமா?

"நீதி நிர்வாகமும், நீதிபதிகளும் பொதுமக்களின் விமர்சனத்திற்கும், ஆய்விற்கும் உட்பட்டவர்களே! நீதிபதிகள் சமுதாயத்திற்கு பதிலளிக்க வேண்டியவர்கள். இவர்களின் இச்சமுதாயப் பொறுப்பு, தங்களுடைய கடமையின்பால் இவர்கள் கொண்டுள்ள நேர்மையினாலும், பற்றினாலுமே தீர்மானிக்கப்பட வேண்டும். அதாவது எவ்வகை அச்சமும், சார்பும் அற்று அரசியலமைப்பையும், சட்டத்ததையும் இவர்கள் பாதுகாப்பதிலும், உயர்த்திப் தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அரசியலமைப்பு சட்டம் என்கிற விளக்கொளியில் எது சரி என்று முடிவெடுக்க வேண்டும். நீதிமன்ற தீர்ப்புகள் விமர்சிக்கப்படலாம். . . கருத்துக்களுக்கான சுதந்திரம் நிலவுகின்ற இடத்தில், நீதித்துறை அமைப்புப் பற்றியும், நீதிபதிகள் பற்றியுமான விமர்சனங்களை வரவேற்கலாம்."

நீதிமன்றங்களை எப்படி வேண்டுமானாலும் விமர்சிக்கலாமா? அதற்கும் "லா டெல்லரே" விடையளிக்கிறது.

"நீதி நிர்வாகத்திற்கு இடையூறு செய்யக்கூடிய விமர்சனம் கூடாது: நீதிபதிகளின் சார்பற்ற அணுகுமுறையின் மீதான நம்பிக்கையை அழித்துவிடக்கூடிய விமர்சனம் கூடாது, நீதி நிர்வாகத்தைக் கேலிக்குள்ளாக்கக் கூடிய விமர்சனமும் தடுக்கப்படவேண்டும். . . நீதிபதிகள் மீது நோக்கங்கள் கற்பிப்பதும் தவிர்க்கப்பட வேண்டும். இது நீதி நிர்வாகத்திற்கு இழுக்கைத் தேடித்தரும்." நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள் விசாரணைக்கு வரும்பொழுது நீதிமன்றம் பற்றிக் கூறப்பட்ட செய்திகள் எத்தகையவை என்பதைக் கணக்கில் கொண்டு நீதிபதிகள் தங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று "லா டெல்லர்" நீதிபதிகளை அறிவுறுத்துகிறது.

" லா டெல்லர் " மேலும் கூறுகிறது: "நீதி நிர்வாகத்தின் மீதான நம்பிக்கை ஜனநாயக அமைப்புக்களை தாங்கி நிற்கும் தூண்களில் ஒன்றாகும். இந்நம்பிக்கையின் மீதுதான் ஜனநாயக அமைப்புகள் செயல்படுகின்றன: நிலைத்து நிற்கின்றன."

இப்பொழுது ' லா டெல்லரை ' நோக்கி நாம் ஒரு கேள்வி கேட்க வேண்டியுள்ளது, நீதிமன்றத்தின் மீதான நம்பிக்கையே தகர்ந்து போகும் பொழுது என்ன செய்ய? ராஜீவ் கொலை வழக்கும், தீர்ப்பும் நீதி நிர்வாகத்தின் மீதிருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கைகளையும் அடித்து நொருக்கி விட்டனவே!

**– வேலு**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குரல் 11

# கொடுமையான தீர்ப்பு!

## வழக்கறிஞர் துரைசாமி

இரகசியமாக நடைபெற்ற ராஜீவ் கொலை வழக்கு விசாரணையில், பத்துக்கும் மேற்பட்ட குற்றம் சாட்டப்பட்டவர்களுக்காக வாதாடியவர் வழக்கறிஞர் சா.துரைசாமி. 26 பேரும் குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்கப்பட்டு எல்லோருக்கும் தூக்குத் தண்டனை தீர்ப்பாக அளிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து துரைசாமியை சந்தித்தோம். அப்போது அவர்..

குற்றம்சாட்டப்பட்ட அனைவருக்கும் மக்கள் நீதிமன்றத்தில் (சிவில் கோர்ட்) மரணதண்டனை ஒட்டுமொத்தமாக அளிக்கப்பட்டது இதுதான் முதல்முறை. இராணுவம் தொடர்பான ஒரு மன்றத்தில் (நீதி மன்றத்தில் அல்ல) இதுபோன்ற ஒரு தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. பிரான்ஸ் நாட்டில் உள்ள நூரம்பர்க் என்ற இடத்தில் போர் குற்றவாளிகளை விசாரிக்க அமைக்கப்பட்ட இராணுவ மன்றம் போர் குற்றங்களில் நேரடியாக ஈடுபட்டதாக அவர்களாகவே ஒப்புக்கொண்ட குற்றவாளிகளுக்கு மட்டும் ஒட்டுமொத்தமாக மரண தண்டனை அளித்தது. ஆனால் இங்கு. . .

ராஜீவ் கொலையில் நேரடியாக ஈடுபட்டவர் என்று சொல்லப்பட்ட தணு இறந்து போய்விட்டார். அவருக்கு உதவி செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட சுபா, சிவராசனும் இறந்துவிட்டார்கள் மீதமிருக்கும் இந்த 26 பேரும் அந்த குற்றத்தில் நேரடியாக ஈடுபட்டவர்கள் இல்லை. அவர்கள் அனைவருக்கும் மரணதண்டனை அளித்தது நூரம்பர்க் இராணுவ மன்றத்தின் தீர்ப்பை விட மிகக்கொடுமையானது.



பேரறிவாளன் எங்கள் கடையில்தான் பேட்டரி வாங்கினார் என ஒரு கடைக்காரர் சாட்சி சொன்னார் ஆனால் அந்த கடைக்காரர் சொன்னதைப்போல ஒரு பேட்டரி மார்க்கெட்டில் இருக்கிறதா என்பதை சி.பி.ஐ. யால் நிரூபிக்க முடியவில்லை. கோல்டன் பவர் என்று சி.பி.ஐ சொல்கிற அந்த பேட்டரியின் துகள்கள், குண்டு வெடித்த இடத்தில் கிடந்தது என்பதுதான் சி.பி.ஐயின் வாதம் நிரூபிக்கப்படாத அந்த வாதத்தை உண்மையென நீதிபதி ஏற்றுக்கொண்டார்.

அதேபோல், இரும்பொறையிடமிருந்து கைப்பற்றப்பட்ட கடிதங்களை வைத்து அவர்மேல் ராமேசுவரம் பாலத்தை வெடிகுண்டு வைத்து தகர்க்க முயன்றார் என்று ஒரு வழக்கு தொடரப்பட்டது. சமீபத்தில் அந்த வழக்கின் தீர்ப்பு அளிக்கப்பட்டது. அதில் இரும்பொறை நிரபராதி என நீதிபதி குறிப்பிட்டிருந்தார்.

இந்த வழக்கிலும் அதே கடிதம் ஆதாரமாக சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் இதில் இருபொறைக்கு மரணதண்டனை அளிக்கப்பட்டுள்ளது. இத்தனைக்கும் அந்த கடித்தில் இருந்து குண்டு சாந்தன் கையெழுத்துதானா? என்பதைக்கூட சி.பி.ஐயால் நிரூபிக்க முடியவில்லை.

மேலும் ரவிச்சந்திரன், சுசீந்திரன் இவ்விருவர் மீது தமிழக மீட்புப்படை என்ற அமைப்பை விடுதலைப்புலிகளுடன் சேர்ந்து அமைத்தார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் 5 வருட தண்டனை என்ற தீர்ப்பு தடா நீதிமன்றத்தில் கடந்த வாரம் சொல்லப்பட்டது.

அதே குற்றச்சாட்டில் அடிப்படையில்தான் அவர்கள் இருவருக்கும் ராஜீவ் கொலை வழக்கில் மரண தண்டனை அளிக்கப்பட்டுள்ளது.

சென்னை நகர பெண்மணியான செல்வலட்சுமியின் பெயரை இந்த வழக்கில் விசாரிக்கப்பட்ட 200-க்கும் மேற்பட்ட சாட்சிகளில் ஒருவர்கூட இவர் பெயரை சொல்லவில்லை, இருவருக்கும் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அதேபோல், சுபாசுந்தரம், இவர் குற்றமற்றவர் என்ற எங்கள் வாதத்தைக்கூட நீதிபதி கேட்க விரும்பவில்லை.

சதி ஆலோசனைக்கு அதிகபட்ச தண்டனை வெறும் 6 மாதம்தான் அந்த சதி ஆலோசனையோடு நடைபெற்ற கொலை அல்லது கொலை முயற்சியில் குற்றவாளி நேரடியாக ஈடுபட்டார் என்பது சந்தேகமின்றி நிரூபணம் ஆனால்தான் அதற்கேற்ற தண்டனையை வழங்கமுடியும்.

நீதிபதியின் தீர்ப்புப்படியே கொலைக்குற்றத்தில் நேரடியாக ஈடுபட்டார்கள் என்ற (302 IPC) குற்றசாட்டு நளினி, பேரறிவாளன் என்ற இரண்டுபேருக்கு மட்டும்தான் பொருந்துகிறது.

மற்றவர்கள் எல்லாம் அவர்களோடு ஏதாவது ஒருவகையில் தொடர்பு வைத்திருந்தவர்கள் என்றுதான் தீர்ப்பே இருக்கிறது. ❑



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குரல் 12

# மக்கள் குடியுரிமைக் கழகம் தமிழ்நாடு, பாண்டிச்சேரி.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் இருபத்தாறு பேர்களுக்குத் தூக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளமை குறித்து மக்கள் குடியுரிமைக்கழகம் (தமிழ்நாடு, பாண்டிச்சேரி) தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்கிறது.

தூக்குத்தண்டனையை மக்கள் குடியுரிமைக்கழகம் எப்பொழுதும் எதிர்த்தே வந்துள்ளது. இது நம்முடைய அரசியலமைப்பு நமக்கு அடிப்படை உரிமையென உறுதி வழங்கியுள்ள வாழ்வதற்கான உரிமையை மீறிய இழிவுபடுத்தும் செயலாகும். நாகரிக சமுதாயம் ஒன்றின் சரியான அடையாளம் அதனுடைய குற்றவியல் நீதி அமைப்பு நேர்மையானதாகவும், மனித நேயத்தோடும் அமைந்திருப்பதே ஆகும்.

விசாரணை தடாச்சட்டத்தின் கீழேயே நடைபெற்றுள்ளது. இத்தடாச்சட்டம் நேர்மையான விசாரணை நெறிமுறைகளோடு ஒத்திசைவதில்லை. இச்சட்டம் கடுமையான விமர்சனங்களுக் குள்ளாகி மைய அரசு இச்சட்டத்தைக் கைவிடும்படியான நிலைக்குத் தள்ளப்பட்டது.

குற்றச்செயல் செய்வதிலிருந்து அச்சமூட்டி தடுத்து நிறுத்தும் கருவிகளாகவே தண்டனைகளைச் சட்டமன்றமும் நீதிமன்றமும் கருதுகின்றன. தண்டனை பற்றிய இக்கோட்பாடு காலங்கடந்த பழமைக் கோட்பாடாகும். தவறான கோட்பாடாகும். எதிர் விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதும் ஆகும். தண்டனைகள் என்பன சீர்திருத்தக் கூடியனவாக இருக்க வேண்டும். அச்சமூட்டி தடுத்து நிறுத்துகின்றனவாகவோ, பழிவாங்கும் எதிர்நடவடிக்கை களாகவோ இருக்கக்கூடாது.

மேலும், ராசீவ் கொலை வழக்கு குற்றம் சாட்டப்படும் குற்றச்செயலில், குற்றம் சாட்டப்பட்ட ஒவ்வொருவரின் தனித்தனிப் பங்களிப்பின் தன்மைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், அனைவருக்கும் தூக்குத் தண்டனை வழங்கியிருப்பது அதிர்ச்சி அளிப்பதாய் உள்ளது. மேலும், குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவரான ஆதிரை சிறைப்படுத்தப்பட்டபொழுது குழந்தை (juvenile – இளைஞர்) என்று சொல்லப்படுகிறது. குற்றம் சாட்டப்பட்டுள்ள வயது வந்தவர்களோடு இவரையும் ஒன்றாகச்சேர்த்து விசாரிக்க முடியாது.ஏனெனில், இது இளைஞர் நீதிச்சட்டம் (juvenile justice act) பிரிவு 24க்கு முரணானதாகும். மேலும், இச்சட்டத்தின் 22வது பிரிவின்படி எந்தவொரு வயது வராத இளைய குற்றவாளிக்கும் மரணதண்டனை வழங்க முடியாது. சிறைத்தண்டனை கூட வழங்க இயலாது. எனவே, ஆதிரைக்கு வழங்கப் பட்டுள்ள மரணதண்டனை சட்டப்புறம்பானதாகும். ❑



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குரல் 13

# எல்லோரும் சரிசமமான குற்றவாளிகளா?

**எகனாமிக் டைம்ஸ் தலையங்கம் (04.02.98 )**

ராசீவ்காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 26 பேருக்கும் மரண தண்டனை விதித்ததானது ஒரு விவாதத்தைத் தூண்டி விட்டே தீரும். இந்த வழக்கு அரசியல் ரீதியில் உணர்ச்சிகரமான வழக்கு என்பதால்தான் எல்லோருக்குமே மரணதண்டனை என்ற மிகையான எதிர் வினை ஏற்பட்டுள்ளதா? மரண தண்டனைக்கு உள்ளாகும் அளவிற்குக் குற்றவாளிகள் எல்லோருமே செயலூக்கமுள்ள சதிகாரர்களா? மிக முக்கிய பிரமுகர்கள் (VIP) சம்பந்தப்பட்ட தேர்வு செய்யப்பட்ட வழக்குகளில் மட்டுமே குற்றவியல் நீதி அமைப்பு தானாகவே முன்வந்து செயல்படுகிறதா? சாட்சியம் அனைத்தும் நமக்குக் கிடைக்கும்போது மட்டுமே ஒரு வேளை இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியும். மரண தண்டனை மிக அரிதாகவே வழங்கப்பட வேண்டுமென உச்ச நீதிமன்றம் தீர்ப்பொன்றில் கூறியிருப்பதால் இந்தக்கொடுரமான குற்றத்தைப் புரிவதற்கும் குற்றவாளிகள் எல்லாருமே விருப்பத்துடன்தான் சதி புரிந்திருக்கின்றனர் என்று தடா சிறப்பு நீதிமன்ற நீதிபதி தனக்குத்தானே உறுதிப்படுத்திக்கொண்டிருக்கிறார் போலும். ஆனால் 26 பேர் சேர்ந்து நடத்திய ஒரு சதி பற்றிய இரகசியம் இந்தக் குற்றத்தைச் செய்வதற்கு முன்பேயே அம்பலமாயிருக்காது என்பது சாத்தியமற்றது. அரசியல் புள்ளிகளைக் கொலை செய்யும் திட்டம் ஒரு சிலருக்கு மட்டுமே தெரிந்துள்ள மிக மிகக் கமுக்கமான விஷயம்தான் என்பதைச் சொல்லத் தேவையில்லை. இந்தக் குற்றத்தை நிகழ்த்துவதில் குற்றம் சாட்டப்பட்ட 26 பேர் எல்லாருமே விருப்பத்துடன் கூட்டுச்சதி புரிந்தனர் என்று சிறப்பு நீதிமன்றம் ஏற்றுக்கொண்டிருந்திருக்க வேண்டும் போலும். அப்படியாயின் சிறப்பு நீதிமன்றம் கீழ்க்கண்டவற்றை நிறுவியிருக்க வேண்டும். (அ) கொலை செய்யப்படப் போகிறவர் யார் என்பதைக் குற்றவாளிகள் அனைவருமே அறிந்திருந்தனர். (ஆ) இந்தக்குறிக்கோளை நிறைவேற்றுவதில் அவர்கள் எல்லாருமே ஒளிவுமறைவில்லாமல் பங்கேற்றனர். இந்த இரண்டு விஷயங்களுமே நீதிமன்றத்தால் நிறுவப்பட்டிருந்தால்தான் குற்றவாளிகள் சதியில் செயலூக்கத்துடன் சம்பந்தப்பட்டிருந்தனர் என்று கூற முடியும். இந்தத் தீர்ப்பில் நீதிமன்றம் சிக்கலான அம்சங்களைப் பரிசீலிக்கத் தேவையில்லை என்று கருதியிருக்கலாம். எடுத்துக்காட்டாக, கொலைகாரர்களாக ஆகக்கூடியவர்களைத் தங்கள் வீட்டில் இரகசியமாகத் தங்க வைத்தவர்கள் ஒன்று அச்சத்தின் காரணமாகவோ அல்லது கொலை செய்யப்படப் போகிறவர் யார் என்பதை அறியாமலேயோ அப்படிச்செய்திருக்கலாம்.

இந்தக் கேள்விகள் யாவும் தாராளவாதச் சிந்தனையுடைய பல்வேறு தனி நபர்களாலும் அமைப்புகளாலும் எழுப்பப்பட்டு வருகின்றன. ஏனெனில், ஒரு சதிச்செயலை நிறைவேற்றும் பொருட்டு 26 பேர் மீது ஒரு கணிசமான காலத்திற்கு தொடர்ந்து நம்பிக்கை வைத்திருப்பது என்பது அதிலும் குறிப்பாக தேச எல்லைகளுக்கு அப்பாலிருந்து சதிகாரர்களைத் திரட்டிச் சேர்க்கையில் – (திட்டம் தீட்டியவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு) அபாயகரமானது. சிறப்பு நீதிமன்றத்தின் தீர்ப்பு மிகையான எதிர்வினையாக இருக்கும் பட்சத்தில், இத்தீர்ப்பு எதிர்கால பயங்கரவாதச்செயல்களுக்கான வித்துக்களை ஊன்றக்கூடும். போதுமான அளவிற்கு ஆத்திரமூட்டப்பட்ட, விரக்தியடைந்த ஒரே ஒரு தனிநபர் மட்டுமே ஒரு பயங்கரவாதத் தாக்குதலைச் செய்வதற்கு போதும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ❑



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குரல் 14

# நீதித்துறை பயங்கரவாதம் ஆகியிருக்கிறது

விடுதலை ராசேந்திரன்
பெரியார் திராவிடர் கழகம்

குற்றம் சாட்டப்பட்ட 26 பேருக்கும், மரணதண்டனை வழங்கியிருப்பது இதுதான் முதல்முறை என்று சொல்லப்படுகிறது. இ.பி.கோ 302வது பிரிவின்படி நேரடியாக கொலைக்குற்றத்திற்கு உள்ளானவர்கள் 2 பேர்தான் என்று, பிற்பகலில் சொன்ன நீதிபதி, மாலையில் அனைவருக்கும் தூக்குத்தண்டனை என்று அறிவிப்பதன் காரணம் புரியவில்லை? வீட்டில் தகவல் தொடர்பு கருவி வைத்திருந்தார் என்பதற்காக விஜயன் என்ற ஈழத்தமிழரோடு, அவரது மனைவி செல்வலட்சுமியும், அவரது தந்தை பாஸ்கரனும், அதேபோல் செல்வகுமார் என்பவருடன், அவரது மனைவியும் கைது செயயப்பட்டார்கள். ஒருவர் தீவிரவாதி என்பதற்காக அவரது வீட்டில் இருக்கும் மனைவியர்களையும், மாமனார்களையும் கைது செய்து, எல்லோருக்கும் மரணதண்டனை வழங்கப்பட்டிருக்கிற அதிசயம் இங்குதான் நடந்திருக்கிறது. உண்மையில் இத்தீர்ப்பின் மூலம் நீதித்துறை பயங்கரவாதமாகி இருக்கிறது. (Judicial Terrorism).

இந்திய உளவுத்துறை உலகத்திலே தலைசிறந்தது என்பதை இத்தீர்ப்பு நிரூபித்துவிட்டது என்று காலரைத் தூக்கி விடுகிறார் சிறப்புப் புலனாய்வுக்குழுத் தலைவர் திரு. கார்த்திகேயன். மரணதண்டனை விதிக்கின்ற அளவுக்கு 26 பேர் சதித்திட்டம் தீட்டினார்கள் என்றால், ஒரு கூட்டம் நடத்தி சதித்திட்டம் போட்டதாகப் பொருள் இப்படி பலபேர் சேர்ந்து நடத்திய சதித்திட்டத்தை, முன்கூட்டியே கண்டுபிடிக்காமல், கோட்டை விட்ட ஒரு மோசமான உளவுத்துறை உலகத்திலேயே இருக்கமுடியுமா என்ற கேள்வி எழத்தானே செய்யும்? ❑



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நெஞ்சம் கிளர்ந்து

நெஞ்சம் கிளர்ந்து நினைவு தளிர்த்த கதையொன்று கேட்டோம். பிஞ்சிலே வளர்ந்து பேச்சறியாப் பருவத்தில் துயர் அத்தனை சுமந்தோம். தமிழைப் பேசினோம். அந்தத் தவறொன்றை நாம் செய்தோம். வேறொன்றும் செய்ததில்லை. வீணே பொழுதைக் கழித்ததில்லை. ஆரென்றும் கேட்காமல் அள்ளி அன்பு சொரிந்தோம். வேறொன்றும் செய்ததில்லை. வாழ்நாளை இழந்ததில்லை. ஆடு அம்மா என்று அலறி அழுதபோது அள்ளிக் குழை போட்டோம். நாய்க்கு கல்லெறிந்து கதறி அழப் பார்த்ததில்லை. வாழை வாடுகிறதென்று வாய்க்கால் வெட்டி நீர் வார்த்தோம். ஆரென்றும் கேட்காமல், எதுவென்றும் பாராமல் அள்ளி அன்பு சொரிந்தோம். வேறொன்றும் செய்ததில்லை.


எல்லாமே இப்படியாகிப் போனதுவோ. பொய்யாய்ப் பழங்கதையாய்ப் புனைவினையாய் ஆனதுவோ.

பாருங்கள். இதுதான் நடந்தது. ஒருவுர் இருக்கக் குடிசை கொடுத்தோம். ஒருவாய் பசி என்றவருக்குப் தின்றதைப் பகிர்ந்தோம். தாகம் என்று கேட்டவருக்கு தண்ணீர் வார்த்தோம்.

கேளுங்கள். உங்களுக்கு அது நடந்தால் உணர்ந்துதான் இருப்பீர்கள். உம் பிள்ளைகளப்பா. நாம் செய்தது அதிகமாக ஒன்றும் இல்லை. ஒன்றுமேயில்லை. ஒருவரைத் தெரிந்திருந்தது. ஒருவருக்கு ஒருவேளை உணவு அளித்தது. ஒருவருடன் கடல் கடந்தது. இன்னொருவரைத் தெரிந்திருந்தது. ஐயோ என்று கத்தியவரை ஆஸ்பத்திரிக்கு கூட்டிச் சென்றது. அவ்வளவுந்தான் செய்தது. இதுவன்றி வேறொன்றும் செய்ததில்லை.

உணர்வு கனிந்து வர ஒருக்கால் காதலித்தது. காதல் கல்யாணத்தில் இட்டது. யாருமறிய மகளை ஈந்தது. இவைதான் செய்தோம். வேறென்ன செய்தோம். கூடி நாம் கூட்டம் போட்டோமா? கோசமிட்டோமா? கொள்ளையடித்தவர், கொலை செய்தவர் அல்லவே நாம். உங்கள் செல்வங்களப்பா. இன்று செக்கடியில் நொந்து கிடக்கின்றோம். கேளுங்கள். தமிழைப் பேசுவதன்றித் தவறென்ன செய்தோம். உங்களுக்கும் அது நடந்தால் ஒருவேளை நீங்கள் அதனை உணரக்கூடும். உயிரென்பது வெறும் தூசோ? உயிர் பிரிவது ஒருபுறமிருக்கட்டும். உயிர் பிரிகிறபோது வருகிற வலி. உயிர் பிரியப்போகிறதேயென்று உணர்கிற போது வரும் துயர்.

ஆரப்பா அறிவார் அதனை. காத்திருக்கிறது ஒரு கயிறு. ஈன்றெடுத்த குழந்தைகளை, பிள்ளைகளை விட்டு, பெற்றெடுத்துப் பேணி வளர்த்த தெய்வங்களைவிட்டு, உறவை விட்டு, சூழ வரும் சுற்றத்தை விட்டு காத்திருக்கிறது ஒரு கயிறு. கழுத்துக்கு நேரே காத்திருக்கிறது. அதை உணர்வார் ஒருவரும் இல்லையோ? ஐயா கலங்காதே என்று ஆறதல் சொல்லி அணைப்பார் எவருமில்லையா?



அம்மா விம்மாதே என்று கையெடுத்து கண்ணீர் துடைத்துவிடவும் நமக்கு நாதியில்லையா? காத்திருக்கின்றோம். மானுட நேயம் கொண்டவர்களுக்காக காத்திருக்கின்றோம்.

www.tamilarangam.net

குரல் 16

# அடுத்தது என்ன?

மகாத்மாவின் மண்ணின் தூக்கு மேடையில் 26 தமிழர்கள். யார் இவர்கள்? நேற்று வரை எங்களோடும், உங்களோடும் இருந்தவர்கள். ஒன்றாய், ஒரு முற்றத் ல் விளையாடியவர்கள். இருந்ததைப் பங்கிட்டு, சாப்பிட்டு ஒன்றாய் வளர்ந்தவர்கள்.

செய்த குற்றம்தான் என்னவோ?

செய்த குற்றம் அறியாத பாவிகள் இவர்கள். என் அயல் வீட்டவனைத் தெரிந்திருந்தது அவனது குற்றமா? மற்ற மனிதர்களின் குரலுக்கு காது கொடுத்தது. அவனது குற்றமா? – சொல்லுங்கள். தமிழர்கள் என்ன, கேட்பார் அற்ற அநாதைகளா? எப்படி இதனை அனுமதிக்க முடியும். எந்த மனச்சாட்சி மௌனித்து பேசாதிருக்கும்? இன்று இந்திய உச்ச நீதிமன்றத்தில் நீதி கேட்டு மேல்முறையீடு செய்துள்ள இவர்களுக்காக நாமென்ன செய்துவிடப்போகிறோம்? மூத்த வழக்கறியர்களை கொண்டு இந்த வழக்கினை நடாத்த ஐம்பது இலட்சம் இந்திய ரூபாக்கள் தேவையே. ஏழு வருடங்கள் நாம் உழைத்து உண்டு வாழ்ந்தவர்கள். அவர்கள் இருண்ட சிறைகளின் பின்னே காலத்தைக் கழித்தவர்கள். அவாக–ளால் முடியுமா இந்தனை பெரிய தொகையை? எங்கள் மனச்சாட்சியைத் தொட்டுப் பார்ப்போம் எங்களை நாங்களே கேள்விகள் கேட்போம்.

இன்று இந்நிதியினைத் திரட்ட அனைத்துத் தமிழர் அமைப்புகள், கட்சிகள் ஆகியவற்றின் பிரதிநிதிக–ளைக் கொண்ட குழுவொன்று இந்தியாவில் அமைக்கப்பட்டுள்ளது. புரவலராக இந்திய இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணாண்டஸ், தலைவராக பழ.நெடுமாறன். துணைத்தலைவர்களாக கரூர். பி.ஆர். குப்புசாமி, கார்முகில், ச. மெல்கியோர், ப. சண்முக சுந்தரம், ஆனூர் ஜெகதீசன், நெல்லிக்குப்பன், ஷ. கிருஷ்ணமூர்த்தி, நாத்திகம் இராமசாமி, புதுவை அழகிரி, நாமக்கல், என்.பி.இராமசாமி, செயலாளர்களாக பெ. மணியரசன், தியாகு, பேரா.ப.கல்யாணி, பொருளாளராக கலாநிதி சப. வீரபாண்டியன் மற்றும் பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட பொதுக்குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

மரணத்தின் விளிம்பில் நிற்கும் நமது சகோதரர்களைக் காக்க நாம் என்ன செய்வோம்? இராமன் அணைக்கட்டைக் கட்ட ஒரு அணில் ஒரு கல்லினை தூக்கிப் போட்டது போல நாமும் நாலு காசுகள் போடுவாம்.

நிதி அளிக்க வேண்டிய முகவரி:

தலைவர்
தமிழர் நிதி
17/1 நரசிம்மபுரம் மயிலை, சென்னை 600 004
அல்லது
வங்கிக்கணக்கிலக்கம்: 5202 05 44805
THAMILAR NIDHI
DEN NORSKE BANK
NORWAY
தொடர்பு முகவரி:
THAMILAR NIDHI
POST BOX 2941
5030, LANDAS
NORWAY

குறிப்பு:

காசோலை, வரைவோலை ஆகியவற்றில்
தமிழர் நிதி என்றே குறிப்பிட விரும்புகிறோம்.

www.tamilarangam.net

நெஞ்சம் கிளர்ந்து நினைவு தளிர்த்த கதையொன்று கேட்டோம். பிஞ்சிலே வளர்ந்து பேச்சறியாப் பருவத்தில் துயர் அத்தனை சுமந்தோம். தமிழைப் பேசினோம். அந்தத் தவறொன்றை நாம் செய்தோம். வேறொன்றும் செய்ததில்லை. வீணே பொழுதைக் கழித்ததில்லை. ஆரென்றும் கேட்காமல் அள்ளி அன்பு சொரிந்தோம். வேறொன்றும் செய்ததில்லை. வாழ்நாளை இழந்ததில்லை. ஆடு அம்மா என்று அலறி அழுதபோது அள்ளிக் குழை போட்டோம். நாய்க்கு கல்லெறிந்து கதறியழப் பார்த்ததில்லை. வாழை வாடுகிறதென்று வாய்க்கால் வெட்டி நீர் வார்த்தோம். ஆரென்றும் கேட்காமல், எதுவென்றும் பாராமல் அள்ளி அன்பு சொரிந்தோம். வேறொன்றும் செய்ததில்லை. எல்லாமே இப்படியாகிப் போனதுவோ. பொய்யாய்ப் பழங்கதையாய்ப் புனைவினையாய் ஆனதுவோ. பாருங்கள். இதுதான் நடந்தது. ஒருவர் இருக்கக் குடிசை கொடுத்தோம். ஒரு வாய் பசி என்றவருக்குப் தின்றதைப் பகிர்ந்தோம். தாகம் என்று கேட்டவருக்கு தண்ணீர் வார்த்தோம். கேளுங்கள். உங்களுக்கு அது நடந்தால் உணர்ந்துதான் இருப்பீர்கள். உம் பிள்ளைகளப்பா. நாம் செய்தது அதிகமாக ஒன்றும் இல்லை. ஒன்றுமேயில்லை. ஒருவரைத் தெரிந்திருந்தது. ஒருவருக்கு ஒருவேளை உணவு அளித்தது. ஒருவருடன் கடல் கடந்தது. இன்னொருவரைத் தெரிந்திருந்தது. ஐயோ என்று கத்தியவரை ஆஸ்பத்திரிக்கு கூட்டிச் சென்றது. அவ்வளவுந்தான் செய்தது. இதுவன்றி வேறொன்றும் செய்ததில்லை.



தமிழ்
மரணதண்டனைக் கைதிகள்
விடுதலைக்கான குழு.